விலை சதம் 70 ★ ★ பக்கங்கள் – 10

LIBRARY ✦ UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
PERIODICALS DIVISION
RECEIVED
1980-10-21

...விருங்கள்!
...அன்னை பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானு பத்தி


# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR


ஆரோக்கியமான
வாழ்வுக்கு
மில்க்வைற்
மெடிக்கேட்டட் சோப்
வாங்கி உபயோகியுங்கள்
விலை ரூபா 1-75 சதம் மட்டுமே!
மேலுறைகளை அனுப்பி
சிறந்த பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மல 22 ஐப்பசி 3 ஜுல்ஹஜ் 9 ஞாயிற்றுக்கிழமை (19—10—80) இதழ் 250

# 'சிலபிரச்னைகளில் சிலபகுதியில் வாக்குக் கணிப்பு எடுக்கலாம்"

## சர்வஜன வாக்கெடுப்பு மசோதா மீது சாவகச்சேரி எம். பி. வி.என். நவரத்தினம்

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு என்பது, நாடு முழுவதும் மக்கள் ஆணையைச் சில குறிப்பிட்ட விஷயங்களைப் பெறுவதற்குரியதாகுமென்றும், தமிழ் மக்களைப் பொறுத்த விஷயத்திலும், சில குறிப்பிட்ட மாகாணங்களைப் பொறுத்த விஷயங்களிலும், அந்தந்தப் பகுதிகளில் வாக்குக் கணிப்பு நடைபெற்றால் பொருத்தமாக இருக்குமென்றும் சாவகச்சேரிப் பிரதிநிதியும், தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகருமான திரு.வி.என்.நவரத்தினம் நேற்றுப் பாராளுமன்றத்தில் சர்வஜன வாக்கெடுப்பு மசோதா மீது பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசியல் அமைப்புச் சம்பந்தமான சட்டமூல விவாதத்தில் கலந்துகொள்வதில்லையென்றும், அதற்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லையென்றும் குறிப்பிட்ட திரு. வி. என். நவரத்தினம், இந்தச் சட்ட மூலத்தில் சில கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டிய அவசியம், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டதால் இது பற்றிப் பேசவேண்டி ஏற்பட்டதென்றும் கூறினார்.

## யாழ்பல்கலைக்கழகத்திற்கு கம்பியூட்டர் இயந்திரம்

(நெல்லியடி)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான கம்பியூட்டர் இயந்திரமொன்று விரைவில் கிடைக்கவுள்ளது.

கம்பியூட்டர் கிடைத்ததும் பல்கலைக்கழக கணித பீடம் கம்பியூட்டர் துறைக்கும் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

## தாலிக்கொடி கொள்ளை

(யாழ்ப்பாணம்)

அத்தியடியில் உள்ள வீடொன்றில் பின்கதவு வழியாக உட்புகுந்த திருடர்கள் நித்திரையிலிருந்த பெண்ணின் 10 பவுண் தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளனர்.

அத்தியடியில் ராஜகோபால் என்பவரின் வீட்டிலேயே இந்

## சிறிமா குடியுரிமைப் பிரச்னை

## 'மாவட்டசபை தேர்தலில் சவாலாக ஏற்போம்"

### பிரதமர்

சபைகளுக்கான தேர்தலில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா குடியுரிமை இழந்தது பற்றிய பிரச்னையை ஒரு சவாலாக ஏற்றுக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது. என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா கடந்த முப்பது வருடகாலமாக சுதந்திரக் கட்சியிலிருக்கிறாரென்றும் ஏன் அவர் அதன் தலைமைப்பதவியை ஏற்கக்கூடாதென்றும் கேட்ட பிரதமர் பிரேமதாச அவருக்கு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

(கொழும்பு)

விரைவில் நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச்

தக்கொள்ளை நடைபெற்றுள்ளது.

பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## பண்ணையில் வழிப்பறி

பண்ணை வழியாக சுருவிலுக்குச் சென்றுகொண்டிருந்த மோட்டார் கார் ஒன்று ஆயுதந் தாங்கிய இருவரினால் வழி மறிக்கப்பட்டு நாலாயிரம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இக் கொள்ளை சமபந்தமாக இருவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளனர்.


# ஹோம் பினன்ஸ்
## லிமிட்.
82, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
# 25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/–க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3.
தொலைபேசி : 89190


# நியாயமான தீர்வையே ஈரான் விரும்புகின்றது

## ஈராக்வெளியேறும்வரைபோர்நிறுத்தமில்லை

### பாதுகாப்புச்சபையில் ஈரான் அறிவிப்பு

வாஷிங்டன் அக். 18

ஈராக்கிற்கும் ஈரானுக்குமிடையிலான சண்டையில் நியாயமான தீர்வொன்றையே ஈரான் விரும்புகிறது ஆனல் ஈரான் மண்ணில் ஈராக்கிய துருப்புக்கள் இருக்கும் வரை போர் ஒய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை''

ஈரானிய பிரதமர் ஜனப்.அலி ரஜாஒ நேற்று ஐ. நா. பாதுகாப்புச்சபையில் இவ்வாறு உறுதியாகக் கூறியுள்ளார்,

தங்கள் நாட்டின் மீது ஈராக் வலுத்தாக்குதலை மேற்கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டிய ஜனப் ரஜாய் சவூதி அரேபியாவிலிருந்து ரடார் சாதனம் பொருத்தப்பட்ட விமானங்களை ஈராக்கிற்கு ஆதரவாக அமெரிக்கா பயன்படுத்தி வருகின்றது என்றும் குற்றஞ் சாட்டினர்.

ஐ. நா. பொதுச் செயலாளர் [illegible] வால்ட் ஹைமுடனும் அவர் மந்திராலோசனைகள் நடத்தினர். அமெரிக்கப் பயணக்கைதிகள் விஜயம் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவும் மறுத்துவிட்டார்.

இஸ்லாமியப் பெருநாளையொட்டி மூன்று நாட்களுக்குப் போரை நிறுத்தி வைக்கும்படி இரு நாடுகளையும் பாகிஸ்தான் ஜனாதிபதி கேட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து தமக்கு ஒன்றும் தெரியாது என்று பிரதமர் ரஜாய் தெரிவித்தார்.

### ஈராக் மறுப்பு

சட் அல் அராப் நீரிணையில் சிக்கிக்கொண்டிருக்கும் வெளிநாட்டுக் கப்பல்களை ஐ. நா. கொடியின் கீழ் வெளியேற அனுமதிக்க வேண்டுமென்று பொதுச் செயலாளர் வால்ட் ஹெய்ம் தெரிவித்த யோசனையை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நிராகரித்து விட்டார்.

சட் அல் அராப் பிரதேசம் ஈராக்கிற்குச் சொந்தமென்றும் அங்கு ஈராக் கொடியின் கீழ் தான் இந்தக் கப்பல்கள் நடமாடமுடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஈரான்–ஈராக் குற்றச்சாட்டு

நியுயோர்க், ஒக். 18

ஈராக்-ஈரான் யுத்தத்தில் ஈராக்கிற்கு சவூதி அரேபியா மூலம் அமெரிக்கா உதவியளிப்பதாக ஈரானும் ஈரானுக்கு அமெரிக்கா உதவி அளிப்பதாக ஈராக்கும் குற்றம் சுமத்தியுள்ளன.

இஸ்லாமியரின் முக்கிய பண்டிகையான ஹஜ் பண்டிகையையொட்டி மூன்று தினங்களுக்கு யுத்தத்தை ஒத்திவைக்குமாறு பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளை ஈராக்கும்-ஈரானும் நிராகரித்துவிட்டன.

ஈரானின் எண்ணைவளமிக்க

(10-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எங்களிடம் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட திறமான (Seagulla) நீலம் கையிருப்பில் உண்டு. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ கிருஷ்ணு றேடேஸ், 92 ஆஸ்பத்திரி ரோட் யாழ்ப்பாணம். 7076

எங்களிடம் சைனுவில் இருந்து இறக்குமதி செய்த திறமான விளைவுகுடம் இருக்கிறது. தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகிருஷ்ணு றேடேர்ஸ், 92 ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 7074

எங்களிடம் 10 அடி நீளமும் 6 அடி அகலமும் உள்ள கடைத் தேவைக்கு உரிய கண்ணுடி சோக்கோஸ் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ கிருஷ்ணு றேடேஸ், 92, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 7075

பதிவுசெய்யப்படாத டெலிக்கா வான், போட்வான் விற்பனைக்குண்டு. ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7084

முற்றிலும் திருத்தியமைக்கப்பெற்ற செவலே (Chevr let) லொறி, மொறிஸ் மினி வான், ஓபல் ரெகார்ட் கார், விற்பனைக்குண்டு. காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் இடையில் பார்வையிடலாம். சுபாஸ், 37, விக்டோரியா ரோட், யாழ்ப்பாணம். 7140

வண்ணார்பண்ணையில் 1¼ பரப்புடன், நவீன வசதிகளுடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்குண்டு. 86, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 7125

வெற்றுத்தேயிலைப் பெட்டிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். அண்ணு தொழிலகம், இணுவில் தெற்கு, இணுவில். 7123

ஷோகேஸ். முன்பக்க அசையும் கண்ணுடிக் கதவு. 5½'X4' பக்க கண்ணுடி 5½'X 5' ஆகக் கூடிய விலைக்குக் கொடுக்கப்படும். பிற்பகல் 2-00 மணிக்கு பின் சந்திக்கவும். 366 பருத்தித்துறை ரோட், நல்லூர். 7134

## விற்பனைக்கு

2 பெரிய கண்ணுடி அலுமாரி, 2 சிறிய கண்ணுடி சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு. தினசரி பார்வை இடலாம். தொடர்புகொள்க: வருத்துப்பளை முறிவு, நோவு வைத்திய சாலை, 245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7120

தண்ணீர் வசதியுடன் இரு பக்கம் ஒழுங்கை அமைந்து வீடுகட்டப் பொருத்தமான 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்க. ஆறுமுகம், C M S. லேன், கொக்குவில் மேற்கு. 7133

## தேவை

பிரபல வியாபார நிறுவனமொன்றிற்கு குறைந்தது ஐந்து வருட அனுபவமும்; வயது 25-க்கும் 40-க்கும் இடைப்பட்ட வான் சாரதி தேவை. அரசாங்க வர்த்தக விடுமுறைகளும், ஞாயிற்றுக் கிழமைகளும் லீவாகக் கொள்ளப்படும். மாத வேதனம் ரூபா 450/-ம் விற்பனைத் தினங்களுக்கு விசேட படியும் கொடுக்கப்படும். 25-10-80-க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 7131 C/o. ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7131

தோட்ட வேலைகளில் அனுபவம் வாய்ந்த பையன்கள் தேவை. வேலைக்கேற்ப தகுந்த சம்பளம் வழங்கப்படும். விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். க. பொன்னம்பலம், 874, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி. 7137

இரண்டு சில்லு ட்ராக்டர். நீரிறைக்கும் பம்புகள் திருத்துவதில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள் இருவர் தேவை. 24-10-80-ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். திருச்செல்வம் அன் கொம்பனி, 510, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7139

ஆங்கிலத்தில் கடிதத் தொடர்புகள் செய்யக் கூடிய கணக்கியல் அறிவுள்ள லிகிதர் தேவை. இளைப்பாறியவர்கள் விரும்பத்தக்கது. 24-10-80-ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். திருச்செல்வம் அன் கொம்பனி, 510, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7138

## தேவை

கண்ணுடித் தொழிற்சாலையில் கூலி வேலை செய்வதற்கு உடனடியாக ஆண்கள் தேவை. நாளொன்றிற்கு 15 ரூபாவரை சம்பளமாகக் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிகிளாஸ்அன்ட்மெட்டல்வேக்ஸ், நீர்வேலி. 7091

## வகுப்புக்கள்

19-10-1980 விஜயதசமியன்று மாலை 4 மணியளவில், புது மாணவிகள் நடன வகுப்புகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். 16, பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கை. தொலைபேசி: 335. (7124)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு எதிரில் காரியாலயம் அல்லது வர்த்தக ஸ்தாபனத்துக்கு உகந்த கட்டிடம் வாடகைக்கு உண்டு. விசாரணை: 123, ஸ்டேசன் வீதி, யாழ்ப்பாணம். 7126

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 7107

## தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி

## பதவி வெற்றிடம்

### கொள்வனவு லிகிதர் தரம் III

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 05-11-1980. தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் யாவையும் பெறுவதற்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அன்றி நேரடியாகவோ ரூபா 3/- பெறுமதியான காசுக்கட்டளை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்பின் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரியிட்ட கடித உறையும், அனுப்பப்படல் வேண்டுமென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1980-10-17.
712[illegible]

## தெல்லிப்பழை இரமாமிய வங்கி மீண்டும் ஆரம்பம்

(தெல்லிப்பழை)

சிலகாலமாக மூடப்பட்டிருந்த தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

பரிசுடன் கூடிய சேமிப்புத் திட்டமொன்றையும் இவ் வங்கி இன்று (ஞாயிறு) அறிமுகப்படுத்துகிறது.

புதிய பரிசுச் சேமிப்புத்திட்டத்தை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சி. சிவமகாராசா இன்று (ஞாயிறு) மு. ப. 10 மணிக்கு ஆரம்பித்து வைப்பார்.

## கலைமகள் விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கலா நிலையத்தினர் இன்று பிற்பகல் கலைமகள் விழாக் கொண்டாடுகின்றனர்.

[illegible] மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும், திருமுறை இன்னிசை அரங்கும் இடம்பெறும்.

# ஆற்றலும் மதிநுட்பமும் கொண்ட அதிபர்



மிகக் குறைந்த காலத்தில், குரும்பசிட்டித் தமிழ்க் கலவன் பாடசாலையை திரு. பொன். பரமானந்தர் மகாவித்தியாலயம் என்ற உயர்நிலை அடையும்படி செய்தவர் திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்கள். இப்பாடசாலையில் அதிபராக அவர் கடமையாற்றியது (1968 - 1977) ஒன்பது ஆண்டுகள் மட்டுமே. இச்சிறிய காலப் பகுதியில் இப் பாடசாலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து காட்சியளித்து வந்ததை நாம் எல்லோரும் அறிவோம்.

அவர் இப்பாடசாலை அதிபரான அதே ஆண்டில் ஊர் மக்களிடம் பணம் திரட்டிப் பாலர் வகுப்புக் கட்டடம் ஒன்றை மிகப்பெரிய அளவில் அமைத்தார். பின்னர் அரசினருடைய உதவி பெற்று விஞ்ஞான கூட கட்டடம், இருமாடிக் கட்டடம், மதில் என்பன அமைத்துப் பாடசாலைக்கு அழகையும் மாணவருக்கு வசதியையும் தேடி வைத்தார். அடிக்கடி கல்வித் திணைக்கள அதிபர்களுடன் தொடர்பு கொண்டு போதிய தளபாட வசதிகளையும் ஏற்படுத்தினர். குரும்பசிட்டி நலன்புரி சபையாரின் உதவியுடன் பாடசாலைக்கு மின் இணைப்பு ஏற்படுத்தி பாடசாலையை மேலும் ஒளி பெறச் செய்தார்.

இவரது காலத்திலே இப் பாடசாலையில் பத்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய வசதி மாணவருக்கு ஏற்பட்டது. வெறும் புத்தகப் படிப்போடு நிறுத்திவிடாமல் விளை

(5-ம் பக்கம் பார்க்க)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ரௌத்திரி வருஷம் ஐப்பசி மாதம் 7ந் திகதி (23-10-80) வியாழக்கிழமை இரவு 10-00 மணி முதல் 10-48 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்,

| எங்கள் புத்திரன் | எங்கள் புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| யோகச்சந்திரா | சுகந்தி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

செல்வச்சந்நிதி கோவிலில் திருமணம் நிகழவிருப்பதால் தாங்களும் சுற்றஞ் சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| பொன். பாலசுந்தரமும் | க. சாம்பசிவமும் |
| (சமாதான நீதிபதி) | (நகை வியாபாரிகள் திருச்சி-இந்தியா, வைரமாளிகை, யாழ்ப்பாணம்-கொழும்பு.) |
| பாரியாரும், | பாரியாரும். |
| 'விதானை வளவு' | 'வைர மாளிகை' |
| தொண்டைமானுறு. | வல்வெட்டித்துறை. |

7097

# திறப்பு விழா

19-10-80 (இன்று) ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30 மணி.

அழகான, தரமான அச்சுவேலைகளைக் குறைந்த செலவில், குறித்த தவணையில் செய்துகொள்வதற்கு உங்களை அழைக்கின்றார்கள்.

## ராஜா பிறின்ரேர்ஸ்

சங்கானை வீதி, அச்சுவேலி.
7122

## விசேஷ பயிற்சியாளர் (SPECIAL TRAINEES) தேவை

கண்ணுடித் தொழிற்சாலையில் உள்ள மின்சார போறணையில் (Electric Furnace) வேலை பழகுவதற்கு பயிற்சியாளர்கள் தேவை. G. C. E. (A/L) சித்தியடைந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

சேவி கிளாஸ் அன் மெட்டல் வேக்ஸ்,
நீர்வேலி.
7090

# சசி காமன்ஸ்

## நிற்றற் றெடிமேட் ஆடைகள்

## Knitted Ready made Garments

அண்மையில் மானிப்பாய் வீதி உடுவிலில் ஸ்தாபிக்கப்பட்ட "சசி காமன்ஸ்" தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் அணியக்கூடிய சிறந்த தரமுள்ள

**நிற்றற் றெடிமேட் ஆடைகள்**

முதல்முறையாக விற்பனைக்கு விடப்படவுள்ளன. சில்லறையாகவும், மொத்தமாகவும் கொள்வனவு செய்ய விரும்புவோர் பின்காணும் விலாசத்திற்கு கடித மூலமாகவோ நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும்.

மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு.

நேரடிப் பாவனையாளர்கள் கிழமை நாட்களில் தொழிற்சாலை விற்பனை களஞ்சியத்தில் மேற்சொல்லப்பட்ட ஆடைகளை வாங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

பொதுமுகாமையாளர்,

# 'சசி காமன்ஸ்'

(உடுவில் கிராமசபைக்கு அண்மையில்)
மானிப்பாய் வீதி, உடுவில்.
7114


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துர்க்கையின் மாருத புன்னகை!

## மாவை பாரதி



"அடக்க அடக்க ஒடுங்குவது தவறு என்பதை மக்கள் உணர்ந்தால்தான் ஒடுங்க ஒடுங்க அடக்குவதும் தவறு' என்பதை ஆள்பவர் உணர்வார்கள்." அறிஞர் கி. ஆ. பெ. வி. எங்கோ எழுதி வைத்த ஞாபகம் தாமரையின் உள்ளத்தில் மெல்ல மினுமினுத்துக் கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் ஆலயங்களின் கோபுர நிழல்களில் நின்று கொண்டே அவளது பெற்ருேர் ஆண்டவனைத் தரிசித்திருப்பார்கள். இன்று சமுதாயம் கொஞ்சம் முன்னேறியுள்ளது. ஆமாம், அவள் துர்க்கையம்மன் சந்நிதியில் விளக்குப் பூஜை செய்யும் அளவிற்குச் சமுதாய மேல்மட்டத்தினர் கொஞ்சம் விட்டுக்கொடுத்திருக்கிருர்கள்.

முப்பத்தைந்து ஆண்டுகளை விழுங்கிவிட்ட அவளது உடலில் பெண்மை தூங்கிக் கிடக்க, அவள் மணவாழ்வு காணுமலே வாழ்க்கைப் பயணத்தை நடத்தி வந்துவிட்டாள். காசு பணம் இல்லாமல் ஏழ்மையில் உழன்ருலும் மானம் மரியாதையில் அவள் ஏழையாகிவிடவில்லை. ஓ... அவளுக்கு எதிரே, கையில் எண்ணெயுடன் தங்கச் சிலையாக 'வந்து அமர்கிருளே..... சித்ரா.... ம்..... ஆரம்பப் பாடசாலையில் ஒன்ருகப் படித்த ஞாபகம். ஆனல் அவள் பெரிய இடத்துப் பெண். சரிகைச் சேலையும், உடலெல்லாம் பளபளக்கும் நகைகளுமாக அவளும் துர்க்கையிடம் வரம் கேட்கிருள். தாமரை அடக்கமுடியாத ஆவலுடன சித்ராவின் தோற்றத்தைத் துருவித்துருவிப் பார்த்துக் கொண்டிருக்கிருள். செல்வச் செழிப்பு, பருவத்தின் மதாளிப்பு, ஒரு அசைக்கமுடியாத கர்வம் நிறைந்த அகங்காரப் பார்வை! ம்....! இருந்தும் என்ன...! அவளும் இன்னும் கன்னியாகவே, தாமரையைப் போலவே மணஞ் செய்யமுடியாமல்தானே இருக்கிருள். இது ஒன்றுதான் இருவருக்கும் உள்ள ஒரேயொரு ஒற்றுமை!

"பிள்ளை..... ஐயோ..... இஞ்சை பாரன்!" அம்மாவின் படபடத்த குரல் அவளைத் திடுக்கிடவைக்கிறது.

தாமரைக்கும், தாய்க்கும் இடையே வைக்கப்பட்டிருந்த எண்ணெய்ப் போத்தல் உருண்டு விழுந்து. எண்ணெயெல்லாம் ஓடப் பரிதாபமாக நொருங்கிக் கிடக்கிறது. அந்த நொருங்கிய துண்டங்களிலே அவளது பிரார்த்தனையின் அணுக்கள் சின்னுபின்னப் பட்டுவிட்டனவா? அவள் விழிகள் பளபளக்க, அந்தச் செயல் எப்படி நடந்தது என்பது போலச் சற்றுமுற்றும் பார்வையைப் படரவிடுகிருள். "சனிபிடிச்ச பிள்ளையள். கோயிலுக்கை வந்தா, அடக்கமா ஒரு இடத்திலை இருக்கிறதை விட்டுப்போட்டு பம்பரமாகச் சுழன்று திரியுதுகள்! உதுகளுக்குக் கோயில்லை என்ன வேலை? ஆடவே வாறதுகள்?" அம்மாவின் ஆவேச அர்ச்சனைகளைக் கேட்டும் சளைக்காமல் முறைத்துப் பார்க்கும் அந்தச் சிறுமி..... ஓ..... சித்ராவின் தங்கை லதா!

"அவரவரும் இருக்கவேண்டிய இடத்திலை இருந்திருந்தால்..... ஏன் உலகம் இப்பிடிப் போகுது? எங்கேயோ குப்பையிலை இருக்கவேண்டியதுகளை எல்லாம் கோயிலுக்கை வர விட்டம்..... அதுகள் எங்களையே எதிர்த்துப் பேசுதுகள். சீ..... இனியும் இதுகளோடை சமமா நாங்களும் வந்து, நேர்த்திக்கடன் செய்யிறதே.....?" சித்ராவின் அகங்காரப் பேச்சை ஆதரித்து அவளின் தாயும் தொடர்கிருள். "ஊரிலையுள்ள கீழ் சாதிகளை எல்லாம் விளக்குப் பூசை செய்யவிட்ட அக்கிரமத்தாலைதானே மழையும் பெய்யுதில்லை. அம்மனுக்குப் பொறுக்காமல் தானே உவளின்ரை எண்ணெயையும் தட்டி ஊத்தினவ! முழுசா நேற்று ஆடு வெட்டித் திண்டிட்டு, இண்டைக்கு விளக்குப் பூசை செய்யினம்' தூ!" கோயில் என்பதையும் மறந்து சித்ராவின் தாய் அசிங்கமாகப் பேசியபோது தாமரையும் நிமிர்ந்து பார்க்கிருள். 'நாங்கள் என்ன கொத்தடிமைச் சேவகரா உங்கள் வர்க்கத்திற்கு!' என்பதுபோல விழிகளைக் குத்திட்டு நோக்கினலும், அவளது பண்பாடு நிறைந்த பரந்த மனம் மெல்ல அமைதி கொள்கின்றது. கற்பூர தீபத்தில் அவளதுஇதயம் ஒன்றிவிடுகின்றது. 'தேவி! எங்கடை அப்புக்குத் தொழில் அது! உன்னை நினைச்சுக்கொண்டு தான் கடைக்குப் போருர். நேற்று சித்ராவின் தம்பி என்னட்டை வத்து மூன்று ருத்தல் இறைச்சிக்குக் காசும் தந்திட்டு என்கையாலேயே வாங்கிக் கொண்டு போனதை நானும் இப்ப இதிலை பகிரங்கப்படுத்திஞ... அவைக்கும் எனக்கு என்ன வித்தியாசம்? விளக்குப் பூசைக்காக ஒரு நேரச் சாப்பாட்டோடு ஒன்பது நாள் விரதமிருந்து வீட்டிலை இறைச்சி சமைக்காம சுத்தமா இருந்து இண்டைக்கு உபவாசமா வந்திருக்கிற என்னைப் பார்த்து நேற்றிரவும் இறைச்சி திண்ட உவை கதைக்கினம்! மனம் சுத்தமில்லாம என்ன பூசையும் கோயிலும்? ஆடு வெட்டிறவன்ரை கடையிலை கணக்கப்பிள்ளையாகவும் உதவியாகவும் நிக்கிற அப்புவுக்குப் பிள்ளை நான். அதுபாவம்! இறைச்சி வாங்கித் திண்டால் பாவமில்லையே....? இது என்ன அறியாமை? ம்..... ஏதோ எனக்குப் போதாத காலம் பூசை தடைப்பட்டுப் போச்சுது! அதுக்காக வீணுப் பிறரை நொந்து என்ன பலன்? ம்..... போவம்! இண்டையோடை ஒன்பது செவ்வாயும் முடிஞ்சுது. ஒன்பது நாள் விரதமும் முடிஞ்சுது. அம்மன் கண் திறந்தாத் திறக்கட்டும். இல்லாட்டி இப்ப அதுக்கு என்ன செய்கிறது....' தாமரையின் முகத்தில் இனம் புரியாத பேரமைதி குடி கொள்கிறது. தாயுடன் மெல்ல வெளி வாசலுக்கு வருகிருள்......

"ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும்" கணீரென்று ஒலிபெருக்கியில் தவழ்ந்து வந்த ஒலியலைகளின் சிலிர்ப்பிலே ஒரு கணம் விழி மூடி மூலஸ்தானத்தை உற்று நோக்கிக் கண் திறக்கிருள். ஓ..... என்ன பேரழகு..... என்ன புன்னகை! அது..... அது சிலையல்ல..... அது உயிர்கொண்ட தெய்வம். தாமரை விழிகளைத் துடைத்துக் கொண்டு பஸ் நிலையத்தை நோக்கி நடக்கிருள். அவள் மனதில் நம்பிக்கை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது......

வீடு வந்து சேர்வதற்குள் இலேசான இடி முழக்கத்துடன் மழைத்தூறல்களும் விழத்தொடங்கி விடுகின்றன. உடை மாற்றிக்கொண்டு அபிராமி அந்தாதிப் பாடல் புத்தகத்துடன் ஜன்னல்க் கரையிலே அமர்கிருள் தாமரை. மெல்ல சித்ராவின் தோற்றமும் ஆணவப் பேச்சும் அவளையும் அவளது நினைவுகளையும் சுற்றிச் சுற்றி வருகின்றன. வெளியே அவளைப் பெற்றவர்கள் பலதும் பத்துமமாக உரையாடிக் கொண்டிருக்கிருர்கள். தாமரையைப் பொறுத்தவரை மணவாழ்வு என்பது தூரத்துப் பச்சையாக எட்டாத தொலைவில் மினுமினுத்துக் கொண்டிருக்கிறது. இருந்தும் அவளால் ஒன்றுமே கற்பனையை வளர்க்கவும் முடியவில்லை. எத்தனை நாட்கள் தான் இப்படிப் பெற்ருேருக்குப் பாரமாக துரதிர்ஷ்டத்தின் சின்னமாக குத்துகல்லாக அமர்ந்திருப்பது? அவளது சமுதாயத்தில், படித்தவனுக பண்புள்ளவனுக ஒருவனை அவள் தேடிக் கொண்டிருக்கிருள். ஓ..... அம்மா..... யாரைக் குறிப்பிடுகிருள்......

"உவன் முத்து, கப்பலுக்குப் போனவன் வலிய வந்து காலுக்கை நிக்கேக்கை பெரிய 'பவர்' காட்டிப் போட்டு இப்ப ஏன் ஆசைப்படுகிறியள்?"

"உனக்கு விளங்காதுவள்ளி! அண்டைக்கு அவன் வெறுங் கையோடை ஓட்டாண்டியா ஊர் ஊராத் திரிஞ்சு வேலை தேடிக் கொண்டிருந்தவன். இண்டைக்கு கௌரவமா நாலு காசு சேர்த்துப் போட்டான். அதோடை வாற

(9-ம் பக்கம் பார்க்க)

## கலைமகள் நீ! கவிஞனுக வைத்ததேன்?

— அருட்கவிஞர் திமிலைக்கண்ணன்—

பல்லவி

கலைமகள் நீயெனக்கு கவி தந்ததேன்?—பொருள்
காசுக்குப் போராடி நான் தவிப்பதேன்?

சரணங்கள்

சிலைபோன்று நீஇருந்து நிதம் சிரிப்பதேன்?—என்
சிந்தையிலே மணல்வீடு நான் அமைப்பதேன்?
அலைபாய்ந்து, அலைபாய்ந்து மனம் பதைப்பதேன்—கலை
அன்னைநீ! எனைக் கவிஞனுக வைத்ததேன்?
—கலைமகள்.....

சிறுகுடிலுள் நானமர்ந்து கவிசமைக்கவா—மழை
திடுதிடெனக் கொட்டும்போது அதில் நனையவா?
நெறிதவறிப் பண்பிழந்து பிச்சையேற்கவா?—அடி
நீலி சூலி பாவியென்று நான் சபிக்கவா?
—கலைமகள்.....


பல பயன் தரும் சென்றிமியூகல் பம்ப்

டெல்டரிக்

பம்ப் செற் ஈ. எஸ். 25 எம்.

கொண்டு குறைந்த செலவில்

குழாய் நீர் பெறுங்கள்.

யாப்பானில், கேற்ரே பம்ப் மனுபக்சரிஸ கம்பனி லிமிட்டெட்டிஞல் இலங்கைக்கென விசேடமாகத் தயாரிக்கப் பெற்ற பம்ப் வெண் கலத்தாலான உற்று கருவ் கொண்டது.



கையிருப்பில் உண்டு ரூ. 1350/-

டெல்மேஜ் போசைட் அன்ட் கம்பனி லிமிட்டெட்

கொழும்பு 10. தொலைபேசி: 93361-7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவர் எழுதும் குறுநாவல்

# பூ நாகம்!

அந்த ஏகாந்தமானவயற் பரப்பில் இருண்ட சோலையாக நிற்கிறது நாச்சிமார் கோவிலடி. அங்குள்ள வெண்ணாவல் மரத்தில் நாச்சிமார் சுவாமி இருப்பதாக அந்தஊர் என்ன - அதைச் சுற்றியுள்ள ஊர்களில் உள்ளவர்கள் கூடச் சொல்லிக்கொள்வார்கள். ஆனால் அந்த வெண்ணாவல் மரத்திற்குக் கீழே இருப்பதோ ஒரு நாகதம்பிரான் சிலை. இந்த ஐயப்பாடு அங்குள்ள ஒருவருக்கும் தோன்றுவதில்லை. நீர்வேலிக் கந்தசாமி கொடியேறி பதினாரும் நாள் வேட்டைக்குப் புறப்படும்போது இந்த நாச்சிமார் கோவிலடிச் சோலையில் சற்று இளைப்பாறுவார். அப்போது மட்டும்வருடத்தில் ஒரு திருநாளாக அந்த நாகதம்பிரான் சிலைக்கு அர்ச்சகரின் அனுக்கிரகம் கிடைக்கும்.

அந்த வெண்ணாவல் மரத்தின் அருகில் ஒரு பிரமாண்டமான வேப்பமரம் மதாளித்து வளர்ந்திருந்தது. அதற்கு அப்பால் சிறிது தள்ளி கூடலாக வளர்ந்திருக்கும்தாழம்பற்றை. அந்தச் சோலையினிடையே ஒரு சின்னக் கிணறு. இதுதான் அந்த நாச்சிமார்கோவிலடி.

எங்கிருந்தோ விழுந்த வேப்பம்பழம் ஒன்று அவன் சிந்தனைத் தொடரை அறுத்தது. கண்ணைத் திறந்து மரத்தை அண்ணாந்து பார்த்தான். மீண்டும் ஒரு வேப்பம்பழம் அவன் முகத்தில் விழுந்தது. பக்கத்தால்கூட வேப்பம்பழம் விழுமா? சிங்கன் திரும்பிப் பார்த்தான். அவன் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. குறுநகை இதழ்க் கடைவாயில் விரிந்தது.

யன்னலில் பதித்து அழகு காட்டிய - முகத்திற்குரியவள் அங்கே வெள்ளைப் பசுவுடன் நின்றுகொண்டிருந்தாள். "என்ன வெள்ளைச்சியைக் கொண்ணந்திட்டீர்" -சிங்கன் மண்ணைத் தட்டியவாறே எழுந்து கேட்டான்.

"அங்கை சும்மாநிண்டு கத்திக்கொண்டிருக்குது, அது தான் பாத்திட்டுக் கொண்ணந்திட்டன்."

"நான் உங்கடை அம்மாட்டை அப்பவே சொன்னனான், அவ கேட்டத்தானே" சிங்கன் வெள்ளைச்சிக்குதாவனை போட்டபடி கூறினான்.

"ஏன் யன்னலுக்காலை நான் பார்த்தால் சிரிக்கக்கூடாதே"

## வடகோவை வரதராஜன்

இந்தச்சோலையில் சூரியனை முற்றாக மறைக்கும் வேப்பமரத்தின்கீழ் ஒரு மண் மேடை. அதன்மேல் ஒரு தென்னங்கிற்று, இதுதான் சிங்கனின் மஞ்சம்; ஏன் சமயத்தில் சிங்காசனமாகவும் பயன்படும். நாகதம்பிரானை ஒருமுறை வணங்கிவிட்டு தன் மஞ்சத்தில் சாய்ந்துகொண்டான் சிங்கன். மந்தைகள் மகிழ்ச்சிமாக மேயத் தொடங்கின. அவன் மனப்பசி ஆறுதலாக இரைமீட்கத் தொடங்கியது.

கோப்பாய்க் கிராமத்தில் ஓர் அபூர்வமான மண்வள எல்லை இருக்கிறது. கோப்பாயை வடக்குத் தெற்காகப் பிரிக்கும் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதிக்குக் கிழக்கில் களி மண் தரையும், மேற்கில் செம்மண் தரையும் இருந்தன. ரோட்டுக்கு இப்பால் இருக்கும் வீட்டுமண் களி மண்ணாகவும், ரோட்டுக்கு அப்பால் இருக்கும் வீட்டுமண் செம்மண்ணாகவும் இருக்கும் அதிசயத்தை இங்கே காணலாம். அந்தச் செம்மண்பூமி சிங்கனின் பிறப்பிடம். வாழைத்தோட்டத்து வரும்படியை நம்பி வாழ்ந்த குடும்பம், வாழைக்கு எருக்கட்டுவதற்காக அவர்களிடம் அநேக மாடுகள் இருந்தன. சிங்கனுக்கு பன்னிரண்டு வயதாக இருக்கும்போது அவன் தந்தை பரலோகப் பிராந்தி எய்திவிட்டார். சிங்கனின் பள்ளிக்கூட வாழ்வு அத்துடன் முடிவுற்றது. தங்களது மாடுகளையும், ஊர்மாடுகளையும் சேர்த்து வயலுக்கு மேய்க்கக் கொண்டுசெல்வான். வயலில் அம்மாடுகள் போடும் சாணத்தைப் பொறுக்கி மாதக் கடைசியில் விற்பான். இதனால் மாதத்தில் நூறோ, இருநூறோ கிடைக்கும். இவனிடம் மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்புபவர்கள் பிரத்தியேகமாக எதுவும் கொடுப்பதில்லை. அவர்களின் மாடுபோடும் சாணம் தான் அவனுக்கு சன்மானம்.

காலைப் பசியை வழியில் உள்ள இலந்தை, விழா மரங்களும், நாச்சிமார் கோவில் நாவல்மரமும் தணித்தன. மதியம் சிங்கனின் சகோதரிகள் ஆரேனும் பழையதோ, புதியதோ வாழைச் சருகில் வைத்துக்கொண்டு வருவார்கள்.

பாக்கியம் அவள்தான் யன்னலில் பதிந்த அழகு முகம் ... பொய்க்கோபத்துடன் கேட்டாள்.

"ஏன் நான் அந்த ஒழுங்கையாலை வாறது உமக்கு விருப்பமில்லையே; உம்மடை அம்மாவுக்கு முன்னாலை நிண்டு கொண்டு உமக்குப் பல்லைக் காட்டிப்போட்டு பேந்து உம்மடை அண்ணன்மாரைக் கொண்டு முதுகுளைவு எடுக்கச் சொல்லுறீரே"

"உங்களுக்கு எப்பவும் அண்ணைமாரைப்பற்றிநக்கல்தான். நீங்கள் நினைக்கிறமாதிரி அவையொண்டும் பொல்லாத ஆட்களில்லை".

"நினைக்கிறமாதிரி" பொல்லாத ஆக்களோ இல்லையோ எண்டு எனக்குத் தெரியாது. ஆனா பாக்கிறதுக்குப் பயங்கரமான ஆக்கள்." சோதின்ரை மீசையையும், தோற்றத்தையும் பார்த்தாலே குடல் கலங்கிப்போம். "உதென்ன செங்காயைத் தின்னுறீர், கைக்கு மெல்லலே; சீச்சீ துப்பும். இந்தாரும், இதைத் திண்டு பாரும்." -சிங்கன் தங்கக்கட்டிகள் போலப் பொறுக்கியெடுத்த சில வேப்பம்பழங்களை அவளிடம் நீட்டினான். அவள் நாணத்துடன் கைகளை நீட்டினாள். அவன், அவள் கைகளில் அப்பொன்னிறக் கனிகளை வைத்தபோது, அவன் கை சற்று அவள் கைகளில் முட்டிவிடவே அவள் துணுக்குற்றுக் கைகளைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு சிங்கனை வெட்கத்துடன் பார்த்தாள். சிங்கனும் இத்தவறுதலால் ஏற்பட்ட நிகழ்ச்சிக்கு அசட்டுச்சிரிப்புச் சிரித்தான். "வேப்பங்காய் கைக்குந்தான். ஆனால் நல்லாய்ப் பழுத்த பழத்தைப் போல ஒரு இனிப்பை நீர் திண்டிருக்கமாட்டீர்." மாம்பழத்தின்ர உருசைக்கு அதில் இருக்கிற இனிப்பும், புளிப்பும் எப்படி உருசை சேர்க்குதோ; அப்பிடித்தான் இந்த வேப்பம் பழத்தின்ரை இனிப்புக்கு அதிலை இருக்கிற சாதுவான கைச்சல்தான் உருசை சேர்க்குது." நன்றாகப் பழுத்த பழமொன்றைப் பிதுக்கி வாயில் போட்டவாறே சிங்கன் சொன்னான். "நானெல்லே சொன்னனான், இந்தத் தாழம்பத்தைச் குக் கிட்டப் படுக்காதையுங்கோ எண்டு; அண்டைக்குத் 'தம்பண்ணை', 'ராசா' வீட்டில் வந்த செட்டிநாக மொண்டைத் தடம்போட்டுப் பிடிச்சு, உந்தத் தாளம்பத்தைக்கைதான் கொண்ணந்து விட்டவர்." -பாக்கியம் அச்சத்துடன் கூறினாள், "சும்மா பயப்பிடாதையும். ஒரு பாம்பும் எனக்குக் கிட்டவும் வராது. பாம்போடை சொறி தேச்சால்த்தான் பாம்பு கடிக்க வரும். என்ரைபாட்டிலை நான் இருந்தால் பாம்பேன் என்னைக் கடிக்க வருகுது."

'எண்டாலும் கவனமாய் இருங்கோ; சரி, நான் வரப்போறன்; அங்கை அம்மா தேடப்போறா." -பாக்கியம் பரபரத்தாள்.

"ஏன் ஓடுறீர், கொஞ்சம் இருந்து கதைச்சிட்டுப் போமன்." -சிங்கன் ஆதங்கத்துடன் கேட்டான்.

"எனக்கு உங்களோடை இருந்து கதைக்க விருப்பமில்லையே: அம்மா ஒரு ஐமிச்சப் பிராணி. தேடி வந்தாலும் வந்திடுவ, வந்தால் அம்பிட்டுப்போவன்." -பாக்கியத்தின் குரலிலும் ஆதங்கத்தின் சாயல் தொனித்தது.

"சரி, போறண்டாப் போம், பேந்து வீண் சோலி; இனி எப்ப வருவீர்?' -'சிங்கன் ஆவலுடன் கேட்டான்.

"இண்டையமாதிரி 'வெள்ளைச்சி' துணைசெய்தால் நாளைக்கும் சந்திக்கலாம், அல்லாட்டி யன்னல் கம்பிப் பார்வையோடு சரி."

"சரி சரி, கெதியாய்ப் போம், அங்கை ஞானமக்கா வாறா. மனிசி கரவாய் விளங்கிக்கொள்ளும்." -சிங்கன் அவசரப்படுத்தினான். ஞானக்காவின் கழுகுக்கண் படமுன் அவன் போய்விடவேண்டும் என்பதே என் அவசரத்திற்குக் காரணம். பாக்கியம் பிரியமனமின்றிப் பிரிந்தாள். காதலர்கள் பிரிந்த துக்கமோ என்னவோ, அந்த வேப்பவிருட்சம் "கோ" என்று அழுமாப் [illegible] எடுத்தது. (தொடரும்)

## பல் பாதுகாப்பு · 4

# பொதுவான கேள்விகளும் அவைக்கான பதில்களும்

2. கேள்வி: பிள்ளைகளின் பற்களின் X-கதிர்ப்படங்கள் ஏன் எடுக்கப்படுகின்றன?

பதில்: நோயுற்ற நிலையை வெளிப்படுத்துவதற்கும் பற்களின் விருத்தியை அவதானிப்பதற்கும், அத்துடன் X-கதிர்ப்படம் பிள்ளையின் தாடையில் நிலையான பற்கள் இருக்கின்றனவா? அவை சரியான இடத்தில் இருக்கின்றனவா? பின் பகுதிகளில் உள்ள பற்களின் அருகாக உள்ள பரப்புகளில் ஆரம்பிக்கும் குழிகள் இருக்கின்றனவா? முதலியவற்றையும் வேறு அசாதாரணங்களையும் காட்டும்.

3. பல் நோய்க்காட்டின் பெறுமதி என்ன? (பல் வைத்தியரால் அல்லது சுகாதார உத்தியோகத்தரால் சுத்தப் படுத்தல்.)

பதில்: பல் நோய்க்காட்டி பற்களிலிருந்து கறைகளையும், காரையும் அகற்றும். இதனால் தோற்றத்தைத் திருத்தி முரசு நோய்கள் வருவதையும் தடுக்கும். நோய்க்காப்பின் பின்பு பல் வைத்தியர் குழிகளையும், வேறு குறைபாடுகளையும் இலகுவாகக் காணலாம்.

4. கேள்வி: நோய்க் காப்பினால் பற்கள் சேதமடையக் கூடுமா?

பதில்: 6 மாத இடைவெளிகளில் அளிக்கப்படும் பல் நோய்க் காப்பு பற்களுக்குத் தீமை விளைவிக்குமென்பதற்கு எதுவித ஆதாரமும் இல்லை.

5. கேள்வி: பிள்ளைகளின் பற்களில் கரிய அல்லது பச்சை நிறக் கறை வருவதற்குக் காரணம் என்ன?

பதில்: பல பிள்ளைகளிலும் இளம் பிராயத்திலும் கறைகள் தோன்றுகின்றன. இவை பற்றீரியா வளர்ச்சியால் உணவுகளால், வாயில் ஏற்படும் இரசாயனத் தாக்கங்களால் ஏற்படலாம். சில கறைகள் அகற்றிய பின் மீண்டும் தோன்றலாம்.

6. கேள்வி: Gumboil (பற்பேத்தைக்கட்டு) என்றால் என்ன? அது ஏன் ஏற்படுகிறது?

பதில்: தொற்றுண்ட பல் காரணமாக ஏற்பட்ட சீழ்க் கட்டே Gumboil ஆகும்.

7: ஒழுங்கற்ற பற்களை நேராக்கத் தொடங்குவதற்குச் சரியான வயது என்ன?

பதில்: சில ஒழுங்கீனங்கள், பிள்ளை மிகவும் இளமையாக இருக்கும்போது பரிகரிக்கப் படவேண்டும். மற்றவைகள் சிறப்பாகப் பிந்திய வயதுகளில் செய்யப்படலாம். பரிகரிக்கத் தொடங்குவதற்கு முன் காரணமும், அதனுடன் தொடர்பான நிபந்தனைகளும் எடுக்கப்படவேண்டும்.

8. கேள்வி: ஒழுங்கற்ற பற்கள் ஏன் நேராக்கப்பட வேண்டும்?

பதில்: சரியாக ஒழுங்குபடுத்தப்பட்ட பற்கள் ஒருவரின் முகத் தோற்றத்திற்கு ஒரு செல்வமாகும். உணவைச் சரிவர மெல்லுவதற்கும், தாய்மையாக்குவதற்கும் உதவும். எனவே சிதைவடைவதற்கான சாத்தியம் குறைவு.

9. கேள்வி: முரசுகளில் இருந்து குருதி கசிவது ஏன்?

பதில்: பல் வைத்தியரால் கவனிக்கப்படவேண்டிய ஆரோக்கியமற்ற முரசின் அறிகுறியே குருதிக் கசிவு ஆகும். அது பற்தூரிகையைச் சரிவர உபயோகிக்காமையாலும் ஏற்படலாம்,

பல் வைத்திய கலாநிதி

**கி. நித்தியானந்தன்**

10. கேள்வி: பயறியாவின் குறிகள் என்ன?

பதில்: சாதாரணமாகப் பல் வைத்தியருக்குத் தவிர' பயறியாவின் குறிகள் தெளிவாகத் தென்படா. சிலவேளைகளில் அவதானிக்கப்படக்கூடிய ஆபத்து அறிகுறிகள், குருதி கசிதல், முரசு சிவத்தல், விரும்பத்தகாத சுவை, இறுதியில் பற்கள் தளர்தல்.

11. கேள்வி: நோயுற்ற பற்கள் அல்லது முரசுகள் உடலின் வேறு பகுதிகளைப் பாதிக்குமா?

பதில்: ஆம். ஏனெனில் பற்களும், முரசும் உடலின் எல்லாப் பகுதிகளுடனும் தொடுக்கப்படுகின்றன. பற் தொற்று வேறு இடங்களுக்கும் பரவலாம். மேலும் வாயில் தொற்று இருந்தால் தொற்றுண்ட பொருள் தொடர்ந்து விழுங்கப்படும். இது சமிபாட்டில் விளைவை ஏற்படுத்தலாம்.

### பல் ஆரோக்கிய வழக்கங்கள்

1. கேள்வி: பற்பசையா பற்பொடியா சிறந்தது?

பதில்: தனியாரின் விருப்பு வெறுப்புகளிலேயே தேர்வு தங்கியுள்ளது. சுத்திகரிக்கும் இயல்புகளில் பசைகளும் பொடிகளும் வழமையாக ஒப்பானவை.

2. கேள்வி: வர்த்தக பற்பசைக்கு அல்லது பற்பொடிக்கு பதிலாக உபயோகிக்கக்கூடிய வேறு பதார்த்தம் இருக்கின்றதா?

பதில்: நியாயமான அளவு திருப்தியான பற்பொடி ஒரு பகுதி மேசை உப்பையும் 3 பகுதி அப்பச்சோடாவையும் கலப்பதால் தயாரிக்கலாம்.

3. கேள்வி: பற்சிதைவைத் தடுக்கக்கூடிய பற்பசை அல்லது பற்பொடி கடைகளில் விற்பனையாகின்றதா?

பதில்: இல்லை. அண்மைக் கால ஆராய்ச்சிகள் பற்சிதைவைத் தடுப்பதற்கு இரசாயன பதார்த்தங்களைச் சேர்க்கலாமெனக்காட்டுகின்றன. ஆனால் இம்முயற்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. பற்பசை அல்லது பற்பொடியில் முக்கிய நோக்கம் பற்களைச் சுத்திகரிப்பதாகும்.

4. கேள்வி: பற்களைத் தூரிகையால் சுத்தப்படுத்துவது ஏன் விரும்பத்தக்கது?

பதில்: தூரிகையின் உபயோகம் பற்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவுகின்றது. பற்சிதைவு தொடங்குவது தாமதப்படுகின்றது. இது முரசுகளை ஆரோக்கியமாக வைக்க உதவுகிறது.

5. கேள்வி: பற்கள் எவ் இடைவெளியில் தூரிகையால் துலக்கப்படவேண்டும்?

பதில்: உணவின் பின துலக்குவதே மிகவும் சிறந்தது. மாலையின் கடைசி ஆகாரம் அல்லது பானத்தின்பின் பல் துலக்குவது மிகவும் அவசியமாகும். பற்கள் நீரினால் நன்றாகக் கழுவப்படுவதும் முக்கியமாகும்.

6, கேள்வி: இனிப்புகள், சொக்கலேற்றுகள் முதலியன உட்கொண்ட உடன் பல்துலக்குதல் பற்சிதைவைத் தடுக்க உதவி செய்யுமா?

பதில்: ஆம், என்றாலும் மிகவும் கவனமாகத் தூரிகையால் துலக்கினாலும் பற்சிதைவை முற்றாகத் தடுக்க முடியும் என்று உறுதியிடமுடியாது.

7. கேள்வி: பற்தூரிகையின் உபயோகம் எவ்வயதில் ஆரம்பிக்கப்படவேண்டும். பெற்றோர் பிள்ளை பல்துலக்க உதவிசெய்யவேண்டுமா?

பதில்: முதலாவது உதிக்கின்ற பல் முளைத்தவுடனேயே பற்தூரிகைஉபயோகிக்கவேண்டும். சில காலத்திற்கு தாயாரே இதனைச் செய்யவேண்டும். பின்பு பிள்ளையை தூரிகையால் பல்துலக்க விட்டு அதற்குப் பிறகு தாயார் துலக்கிவிடலாம். இப்படியாகப் பிள்ளை ஒழுங்காகப் பல் துலக்க பழகுவர் என்றாலும் தாயாரே குழந்தையின்வாயை சுத்தமாக வைத்திருப்பார்.

8. கேள்வி: எவ்வகையான பற்தூரிகைபாவிக்கவேண்டும்? பற்களைத் துலக்கும்போது என்ன நடைமுறை கையாள வேண்டும்?

பதில்: தெரிவுசெய்யப்பட வேண்டிய பல்தூரிகையும் பல் துலக்கப்படவேண்டிய முறையும் பல் வைத்தியரால் கூறப்படும்.

9. கேள்வி: ஒழுங்காக்கும் தகடுகளையும் செயற்கைப் பற்களையும் எவ்வாறு கவனிக்க வேண்டும்?

பதில்: இவை இயற்கைப் பற்களைச் சுத்திகரிக்கும். அதே வேளைகளில் அவற்றைப்போல் சுத்திகரிக்கப்படவேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாட்டின் மூலம் அடியார் பெறும் நன்மை

"தாய் அன்புக்கு இணையே இடையாது. அது தன்னலம் கருதாப் பேரன்பு. அந்தத் தாயின் வடிவாய் அன்பின் பிழம்பாய் அண்டசராசரங் களின் அன்னையாய் உள்ள பராசக்தியின் பரங்கருணை யும் அப்படியேயாகும்."

அங்கிங்கெனதபடி எங் கும் நிறைந்த பரம்பொருளை ஆயிரமாயிரம் வடிவிலும் நாம த்திலும் அமைத்து வழிபடத் தொடங்கியவர்கள் நமது முன் னோர். அப்படித்தொடங்கிய காலம் இன்னது என்று வரம்பு கட்டுமாறு இல்லை. பழமைக் குப் பழமையாய் வரலாறு கட ந்த வாய்மையாய் ஆராய்ச்சி யுலகின் அப்பாலுக்கப்பாலாய் விளங்குவது இவ்வழிபாடு.

## வழிபாடு

வழிபாடு என்பது இறைவ னின் ஏதாவது ஒரு வடிவை அகத்தில் ஏற்றி அபிஷேகம் செய்து மலர் சொரிந்து அலங் காரம் செய்து தூபதீபம் காட்டி வேண்டுவனவெல்லாம் அத்திருவுருவத்திடம் வேண்டி நிற்பதேயாகும். இவ்வழி பாட்டில் மிகுதியும் நம்மை ஈர் த்து நிற்பது சக்திவழிபாடே யாகும். தாய் அன்புக்கு இணையே கிடையாது. அதுதன் னலம் கருதாப் பேரன்பு. அந் தத்தாயின் வடிவாய், அன்பின் பிழம்பாய், அண்டசராசரங் களின் அன்னையாய் உள்ள பராசக்தியின் பரங்கருணையும் எமது சமய மரபு. அன்பு சிவ மாகவும் அன்போடு பிரியாத அருள் சக்தியாகவும் நின்று அடியார்களுக்கு அருள் பாலிக் கிறது.

"எத்திறம் நின்றான்
ஈசன் அத்திறம்
அவளும் நிற்பான்"

ஆதலின் சிவவழிபாட்டோடு சேர்ந்ததுசக்திவழிபாடாகும்.

### சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அப்படியேயாகும். அவளரு ளாலேயே உலக இயக்கம் ஒழு ங்காக நடைபெறுகிறது. இத னைச் சிவஞானசித்தியார் செய் யுள் விளக்குகிறது.

சக்திதான் நாதம் ஆதி நாலு
கும் சிவமும் அந்தச்
சக்திதான் ஆதியாகும்
தரும் வடிவு ஆனவெல்லாம்
சக்தியும் சிவமும் ஆகும்
சத்திதான் சத்தனுக்கோர்
சத்தியாம் சத்தன்வேண்டின்
எல்லாம் ஆம் சக்திதானே

எனவே அவளும் அவனே; அவனும் அவனே என்பது

## வெற்றித் திருநாள்

ஆண்டுதோறும் புரட்டா தித் திங்கள் பூர்வபக்க பிர தமை முதல் நவமிவரை ஒன் பது நாட்கள் நவராத்திரி தினங்களாகும். பத்தாவது நாள் வெற்றித்திருநாளாகிய விஜயதசமி தினமாகும். இந் நாட்களில் முப்பெருஞ் சக்தி களாகிய காளி, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களை வழிபடுகிறோம். துர்க்கா மூர் த்தமே இம்மூன்று சக்தி வடி வில் நின்றுஅருள்பாலிக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

---

### சக்தி வழிபாடு

# பாரதி வழிநின்று பராசக்தியின் அருள்பெற முயல்வோம்

மானிட வாழ்க்கைக்கு மிக முக்கியமான உள்ளத் துணிவை, அறிவுத் தெளிவை, செல்வந்தேடும் ஆற்றலைப் பெற்றிட, சக்தியை மூன்று வடிவங்களில் வைத்து வழி படுவது மரபு. துர்க்கை, லட் சுமி, சரஸ்வதி ஆகிய வடி வங்களில் வைத்து ஆராதனை செய்து சக்தியின் அருளைப் பெற இமாலயத்திலிருந்து இலங்கை வரையுள்ள இந்து

இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் இன்னும் பல உறவு முறைகளிலும் உண்மை யான பக்தன் வழிபடுகிறான். உலக வாழ்வில் நிலவும் எல்லா விதமான உறவு முறைகளி லும் தாய்-சேய் உறவுமுறை தான் மிக உன்னதமான நிலை யில் திகழ்கிறது. சேய்வளர்ந்து நல்லவனாகத் திகழ்ந்தாலென்ன தீயவனாய்த் திரிந்தாலென்ன, செல்வத்தில் புரண்டா லென்ன, தரித்திரத்தில் நெளிந்தாலென்ன,மேதையாக விளங்கினாலென்ன, 'பேதை யாக' இழிந்தாலென்ன, தாய் எந்நிலையிலும் சேயை நேசிக்கிறாள்; மாறாதஅன்பைப் பொழிகிறாள். தந்தைக்கும் - தனயனுக்கும் உள்ள உறவு இத்தகையதல்ல. தனயன் வளர, வளர தந்தைக்கும் தன யனுக்கும் இடையில் உள்ள உறவு வளர்ச்சியடையாது தளர்ச்சியடைகிறது. எனவே தான் தாய்-சேய் உறவு முறைக்கு ஈடாக வேறெந்த உறவு முறையையும் கூற முடி யாது. இறைவனுடைய அன்பை தாயினுடைய அன் பிற்கு ஒப்பிட்டு, தாயைவிடச் சிறந்தவன் இறைவன் என மாணிக்கவாசகப் பெருந்தகை பின்வரும் சிவபுராண அடியில் கூறுகின்றார்.

"தாயிற் சிறந்த தயாவான
தத்துவனே"

இறைவனை உமா - மகேஸ் வரன் இலட்சுமி - நாராயணன் என அழைப்பது மரபு.

"அருளது சக்தியாகும்
அரன்தனக்கு
அருளையின்றி
தெருள் சிவமில்லை அந்தச்
சிவமின்றி சக்தியில்லை"

எனச் சிவஞான சித்தியாரும் செப்புகின்றது. சக்தியின்றி சிவமில்லை; சிவமின்றிச் சக்தி யில்லை. அருள்தான் சக்தி. தெருள் தான் சிவம். சக்தி யின்றி சிவம் தொழிற்படாது. சக்திக்கும் சிவத்துக்கும் உள்ள உறவை திருமூலர்

"வாயும் மனமும் கடந்த
மனோன்மணி
பேயும் கணமும்
பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த
அரனுக்கு
தாயும் மகளும் தாரமும்
ஆமே"

என்றார்.

மாணிக்கவாசகர் இம் மூன்று வித உறவேயன்றி நான்காவ தான முறையையும் கூறுகின் றார்.

"இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன்,
மகன், தகப்பன்,
தமையன்"

என்று சகோதர முறையையும் சேர்க்கின்றார். இவ்வாறு சக்தியானவள் சிவத்துக்குத் தாயாகவும், மகளாகவும், மனைவியாகவும், சகோதரியாக வும் இருந்து அவனைத் தொழிற் படுத்துகிறாள். அவளுடைய சேர்க்கையாலேயே இறைவன் பிரபஞ்சமாய் விரிந்து, இருந்து ஒடுங்குகின்றான்.

சக்தியின் அருளாலேயே உயிர்கள் சிவத்தை அறியவும், அடையவும் முடியும்.

"எங்கோ மான் அன்பர்க்கு
முன்னி அவள்
தமக்கு முன் சுரக்கும்
…"

எனப் பாடினர் மாணிக்கவாசகர்.

### "கரவை கிழார்"

சமயத்தவர் நவராத்திரிக் காலத்தில் வழிபடுகின்றனர். கவிச்சக்கரவர்த்தி கம்பன் முதல் இருபதாம் நூற்றாண்டு மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன் வரை சக்தியை வியந்து பல கவிஞர்கள் கவிதை மழை பொழிந்துள்ள னர். பாவேந்தர் பாரதிதா சன் பின்வரும் பாவில், பரா சக்தியின் பெருமையை மிக அழகாக அமைத்துள்ளார்.

எங்கெங்கு காணினும்
சக்தியடா—தம்பி
ஏழுகடல் அவள்
வண்ணமடா—அங்கு
தங்கும் வெளியினில்
கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென
ஓடுமடா—ஒரு
சங்குலில் ஏழு
முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது
கண்டதுண்டோ—எனில்
மங்கை நகைத்த
ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு
தோன்றுதடா.

காளை ஒருத்தன்
கவிச்சுவையை—கரை
காண நினைத்த முழு
நினைப்பில்—அம்மை
தோளைசைத் தங்கு
நடம்புரிவாள்—அவன்
தொல்லறிவாளர் திறம்
பெறுவான்—ஒரு
வாளைச் சுழற்றும்
விசையினிலே—இந்த
வையம் முழுதும்
துண்டுசெய்வேன்—என
நீள இடையின்றி நீ
நினைத்தல்—அம்மை
நேர்படுவாள் உன்றன்
தோளினிலே.
மனமருள் என்னும் இருள்
அகன்று தெருள் உதயமா
கிடச் செயற்கரும் …செயல்

(7ம் பக்கம் பார்க்க)

---

## கலைமகள் பாதங்கள் பணிவோமடா!

கணபதி பாதம் பணிவோமடா — தம்பி
கஷ்டங்கள் வாராமல் காப்போமடா
கூத்தனைக் கும்பிட்டுப் பணிவோமடா — தம்பி
குற்றங்கள் வாராமல் பார்ப்போமடா
முருகனைக் கும்பிட்டுப் பணிவோமடா — தம்பி
முத்தமிழ் மாலைகள் கோப்போமடா
மலைமகள் பாதங்கள் பணிவோமடா — தம்பி
மற்றவர் நோகாமல் வாழ்வோமடா
கலைமகள் பாதங்கள் பணிவோமடா — தம்பி
கல்வியைப் பேணிக் கற்போமடா
அலைமகள் பாதங்கள் பணிவோமடா — தம்பி
அருங்கலை பேணி வளர்ப்போமடா
செந்தமிழ் வாணியைப் பணிவோமடா — தம்பி
செல்வக் களஞ்சியம் சேர்ப்போமடா
பைந்தமிழ்ப் பாவையைப் பணிவோமடா — தம்பி
பாரெல்லாம் வாழ உழைப்போமடா
நந்தமிழ் வாணியைப் பணிவோமடா — தம்பி
நற்றமிழ் மாலைகள் சேர்ப்போமடா

வல்லிபுரத்து முருக வே. பரமநாதன்

---

## உங்கள் கவிதைகள்

கவிதை இயற்றுங்கள் என்று கேட்டிருந்தோம். உங்களிற் பலர் உற்சாகத்துடன் கவிதைகள் எழுதி அனுப்பியிருந்தீர்கள். சிலவற்றை இங்கு தருகின்றோம்.

### திங்கள் வெண்ணிலவைச் சிந்தி வரும்போது

செங்குமுதம் விரியச் சேதாம்பல்மலர
முல்லைமல்லிகையும் முறுவலித்து மணம்வீச
மங்கையரின்மார்பில் மலராத மொட்டிரண்டு
கச்சறுத்தே விம்மிநிற்கும் காட்சியிவையெல்லாம்
திங்கள்வெண் நிலவைச் சிந்திவரும்போது
திக்கெட்டும் வரவேற்கும் சிந்தையிலேமகிழும்
எங்கள்வளநாட்டின் இயற்கை யிதையெல்லாம்
எடுத்தியம்ப என்னாற்றல் எள்ளளவுதானே.

உரும்பராய் 'சந்திரிகை'

### பூரண நிலவே!

கற்பனை யுலகில் வாழும் கவிஞர்கள்; காதல் வெள்ளச்
சொர்ப்பனத் தாழ்ந்தோர்; மற்றுஞ் சொன்ன
விஞ்ஞான மன்னர்
பற்பலர் தமக்கும் நல்ல பரிசினை யீவான் வேண்டிப்
பொற்பமை வானிற் பூத்தாய்! பூரணமதியே; வாழ்க.

கரவெட்டி செல்வி ஜீன்தயானி இராசசூரியர்

### நீ மட்டும் விதிவிலக்கா?

விண்ணில் உலவும் முழு நிலவே—என்
கண்ணில் தோன்றி மறைவதுமேன்
மேகத்திரையில் மறைந்து நிதம்
சாகசம் செய்வதும் ஏனோடி

எண்ணத் தொலையாப் பெருவெளியில்
வண்ணம் கலையாப் பேரழகில்
கண்ணில் தவழும் நின்னுருவை
எண்ணில் இதயம் உருகுதடி.

அல்வாய் செல்வி குமுதினி இராமநாதர்

### உதிக்கும் திங்கள்

மாலையிலே கீழ்வானில் உதயஞ் செய்யும்
மாட்சிதரும் மதியைத்தன் மனத்தால் மாந்தி
சாலையிலே நின்ற விளங் கவிஞன் சொல்வான்
சாற்று மிதன் வடிவனைத்துஞ் சங்க கால
ஓலையிலே கண்டேன்யான்; உவமை யொன்றோ
உண்மையிலே மங்கையரின் முகமீ தென்கை
சேலையிலே அமலியிடஞ் சேருங் காமச்
செழுங்கடலின் எழுமுகத்தைச் சேருமாமோ.

அளவெட்டி வை. க. சிற்றம்பலம்

### சிவன் முடிச் சிறப்புங் கண்டாய்

விருத்தம்

பொங்குபாற் கடலின் கண்ணே பூமக ளுடன்பி றந்து
மங்கையர் முகந்த வழ்ந்து மறிதிரைக் கடல ணங்கின்
அங்கையிற் பந்தாயாடி அரசர்வெண் குடையு மாகித்
திங்களஞ் செல்வ னே!நீ சிவன்முடிச் சிறப்புங் கண்டாய்

சங்கானை செல்வி பிரியதரிசினி சிவலிங்கம்

### நிலவு மகள்

பொங்கிவரும் புதுநிலவே பூவையரின் முகவொளியே;
மங்கிவரும் மாலைவேளை மாதின்மதி செந்தணலோ;
தங்கிவரும் முகில்கூட தாடையவள் பூங்குழலோ;
பங்கிடுவாய் பாதியொளி பாவையென் பைங்
கொடியினில்.

யாழ்ப்பாணம் எஸ். எஸ், தங்கருஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி வழி......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

துர்க்கை மகாகாளி. துர்க்கை மகாலட்சுமி, துர்க்கை மகா சரஸ்வதி என்று போற்றுவது வழக்கு, இவ்வழிபாட்டின் பயனுக முறையே ஆற்றல், செல்வம், ஞானம் ஆகியவற்றை அடியார்கள் பெறுகிருர்கள்.

"ஆத்தாள், அபிராம வல்லி, அண்டமெல்லாம் பூத்தாள், புவியடங்கக்காத்தாள், முக்கண்ணி, அவளைத்தொழுவார்க்கு ஒரு தீங்குமில்லை" என்று அபிராமிப்பட்டர் வாக்கு.

காமாட்சி, கலியாணி, காளி, சாமுண்டி, பகவதி, கன்னியாகுமரி, மீனாட்சி, சிவகாமி, அகிலாண்டேஸ்வரி என்றெல்லாம் அவள் நாமத்தைச் சொல்கின்றபோது எம்முள்ளம் களிக்கின்றது.

### ஆன்மீகப் பார்வை

முதல் மூன்று நாட்களுக்குரிய துர்க்கைமகாகாளி கருநிறத்தவளாகக் காட்சி தருகிருள். உலகப்பார்வையில் இருட்டாக இருப்பது ஆன்மீகப்பார்வையில் ஒளியாக இருக்கும். இந்த உண்மை விளக்கத்தையே இவள் காட்டுகிருள். ஆன்மீகப் பகல் நமக்கு இருளாகத் தோன்றுகிறதே, அதனுலேயே அவள் கருநிறத்தவளாக வருகிருள். கடல்நீரைக் கையில் எடுத்ததும் வண்ணமற்றதுபோல்ஆகிவிடும். அதுபோன்று அவளை அணுகிவிட்டால் ஒளிமயமே புலனுகும். பாரதியார் கூறுகின்ருர். ஞானவாளால் எமது அகங்கார மண்டையை உடைக்கிருள். காலத்தை நடத்துபவள் அவளே. பீஜாட்சத்தில்

க—தர்மம்
ல்—அர்த்தம்
ஈ—இன்பம்
ம்.....மோட்சம்

எனவே சகல பேறும் இந் நாமத்தில் அடங்கியுள்ளது.

இடை மூன்றுநாளும் துர்க்கை மகாலட்சுமி வழிபாட்டுக்குரியவை என்பர். இவள் செஞ்சோதி வடிவினள். இந்தச் செம்மையிலேயே காளியின் கருமையும் கலைவாணியின் வெண்மையும் கலந்துள்ளது, இவளை மையமாக வைத்து இடப்புறம் காளியையும் வலப்புறம் சரஸ்வதியையும் வைத்து வழிபாடு செய்ய வேண்டும். கமலாசனி எனப் பேசப்படும் இவள் பக்தர்கள் உள்ளத்தில் குடியிருந்து சகல பேறுகளையும் வழங்குகிருள்.

முயற்சி, தானம். வழிபாடு, மங்கலம், உண்மை, நீதி, சுமங்கலிகள், பசு, பூரணகும்பம். திருவிளக்கு, சுகந்ததீபம், செல்வம், நறுமலர்கள் அமைந்த இடங்களில் இவள் பிரசன்னமாவாள். இகபோகங்களையும் பரலோகத்தையும் பக்தர்களுக்கு வழங்குவதில் ஆனந்தமடைவாள்.

சரஸ்வதி என்னும்போது சத்தியவடிவாக அமைந்தவள் என்பது நினைத்தற்குரியது. தியானத்தில் இவளது வடிவம் சந்திர ஒளி. ஆனுல் உண்மையின் வடிவம் வெண்மை. எனவே வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு வெள்ளைக்கமலத்தில் வீற்றிருந்து காட்சிதருகிருள். இவ்வுலகைச் சீராக வைத்து ஆட்சி செய்பவள் அவளே. அறிவுதான் ஆட்சிசெய்யவேண்டும். சரஸ்வதி கடாட்சம் அமையுமிடமெல்லாம் ஞானமயமேயாகிவிடும். இதன்பேருக எமது உள்ளமும் ஞானவெளியாகி, வெண்மைக்கிருப்பிடமாக அமைந்துவிடும்.

ஆகவே மானிடப்பிறப்பில் ஆற்றலும் பொருளும் பெற்று வாழ்வோர் அறிவுநிரம்பப் பெற்றவர்களாக இருந்தாற்தான் வாழ்வு முழுமையாக அமையும்.

இம்முழுமையைப் பெற்று வாழ நவராத்திரி வழிபாடு நமக்கு வழிகாட்டுகிறது.

# வெள்ளை மாளிகை செல்ல விரும்பும் ஒரு முன்னுள் நட்சத்திரம்!

எஸ். பி. கிருஷ்ணன்

கடந்த இரு நூற்றுண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் வெள்ளை மாளிகையை அலங்கரித்தவர்கள் 38 பேர். இவர்கள் பல்வேறு இனத்தை, மதத்தை, தொழிலை சார்ந்தவர்கள்.

முதல் ஜனுதிபதியாக இருந்த ஜோர்ஜ் வாஷிங்டனும் ஆபிரகாம் லிங்கன், தியோடர் றூசவெல்ற், பிராங்ளின் றூசவெல்ற், ஜோன் எவ். கென்னடி, நிக்சன், ஜிம்மி காட்டர் ஆகியோர் தனித்துவம் படைத்தவர்கள்.

நவம்பர் 4-ல் நடைபெறப் போகும், அமெரிக்க ஜனுதிபதி தேர்தலில் ஒரு சினிமா நடிகர் தெரிவு செய்யப்படுவாரா? வெள்ளை மாளிகைக்கு செல்ல அனுமதி கோரும் முதல் சினிமா நட்சத்திரம் றெஞல்ட் றீகன்.

றீகன் வெறும் நடிகன் மாத்திரமல்ல.

இராணுவ அதிகாரியாகவும் மாநில ஆளுனராகவும் இருந்து அரசியல் அனுபவம் பெற்றவர் தான்.

ஒரு சப்பாத்துக்கடை விற்பனையாளனுக இருந்த தந்தைக்கு மகனுக 1911-ம் ஆண்டு பிறந்தார் றீகன். கல்வியில் திறமையற்றவனுக இருந்த இளைஞன், பாடசாலை நாடகங்களில் தன் திறமையைக் காட்டினுன்.

டெஸ் மொய்னீஸ் வானெலி நிலையத்தில் முதலில் விளையாட்டு அறிவிப்பாளராகச் சேர்ந்த றீகன் நேயர்களின் பாராட்டைப் பெற்ருர். இங்கிருந்தே ஹொலிவுட்டிற்குப் போகத் தன்னை தயார் மடுத்திக்கொண்டார் றீகன்.

1937-ல் றீகன் கலிபோனியாவிற்கு, தற்செயலாகப் போக நேர்ந்தபோது, அவர் நண்பன் ஒருவரால். வாணர் பிரதேர்ஸ் ஸ்ருடியோவிற்கு, "இவர் இன்னெரு றெபேட் டெய்லர்" என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். உடனேயே றீகன் பரீட்சிக்கப்பட்டு, பதில் எதுவும் கூறப்படாமல், அனுப்பப்பட்டார்.

சில நாட்களுக்குப் பின் றீகனுக்கு ஒரு தந்தி கிடைத்தது. "கிழமைக்கு 200 டாலர். ஆறு மாத ஒப்பந்தம். விரும்பினுல். மேலும் ஏழு ஆண்டுகள் ஒப்பந்தம் விரிவாக்கப்படும். "அந்த மகிழ்ச்சியான வேளையில் என் தலை பம்பரம் போல் சுழன்றது" என்கிருர் றீகன்.

றீகனின் திரையுலக வாழ்க்கை தொடர்ந்தது.

1940ல் நடிகை ஜேன் வைமனை மணந்துகொண்டார். ஒரு குழந்தை பிறந்தது. எட்டு ஆண்டுகள்தான் இந்த மண ஒப்பந்தம் நீடித்தது.

1942ல் இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கிய போது, றீகன் சினிமாவை விட்டு இராணுவத்தில் சேர்ந்தார். அங்கேயும், றீகனுக்கு, படைவீரரை மகிழ்விக்கச் சினிமா தயாரிக்கும் பணி கிடைத்தது,

1954ல் ஒன்றரை இலட்சம் டாலர் சம்பளம் பெற்றுக்கொண்டு தொலைக்காட்சி நிலையம் ஒன்றில் கடமையாற்றினுர். இப்பொழுதுதான் றீகனுக்கு அரசியல் தொடர்பு ஏற்பட்டது. குடியரசுக்கட்சியில் சேர்ந்துகொண்டார்.

1967 தொடக்கம் 1975 வரை கலிபோர்னியா ஆளுனராக இருந்தார், றீகன்.

இன்று இவர் ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிடுகிருர். எழுபது வயதானுலும் திடகாத்திரமான உடலோடு, உற்சாகத்தோடு இருக்கிருர் றீகன்.

நவம்பர் 4ல் தேர்ந்தெடுக்கப்பட்டால் வெள்ளை மாளிகைக்குப் போகும் முதல் நடிகன், றீகன் என்ற சொற்கள் வரலாற்றில் இடம்பெறும்.

கற்பனைப் படவுலகைப் போல், நிசவாழ்க்கையில் நடிப்பது அவ்வளவு சுலபமானதல்ல.

அனுபவமில்லாதவர்கள் அரசியல் நடத்தமுடியாது. பணத்தைப் பயன்படுத்தித் தேர்தலில் வெற்றிபெறுவது சுலபம். ஆனுல் மக்கள் நலன் ஆய்ந்து ஆட்சிசெய்வது, எல்லாருக்கும் முடிந்த காரியமல்ல.


டியுறேல்
அப்பிள் பழச்சுவையுள்ள,
இரும்புச்சத்து நிறைந்த,
பிள்ளைகளுக்கான
விற்றமின் பாணி.





பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பி கொம்பிளெக்சும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் உங்கள் பிள்ளைகள் பெரிதும் விரும்[illegible] சுவையுடையது.

சில்லறை விலை 170 மிலி. - ரூ. 13/75

உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் மெருகூட்டி சுறுசுறுப்பாக்க சக்திச் செறிவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேயுரிய டியுறேல் கொடுங்கள். அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது....
அதுவே பலம் வழங்குகிறது.

ஒவ்வொரு
கரண்டி பிள்ளைகளுக்கான
டியுறேலிலும் இரும்புச்சத்து
நிரம்பியிருக்கிறது

Grant K & E 3254


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

## கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

### கல்விப் பணிப்பாளர் புளகாங்கிதம்

ஆயிரக்கணக்கான மாணவ மலர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் சங்கமித்த சபை நடுவே பூரித்து நிற்கிறார் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் அவர்கள். யாழ். இந்துமகளிர் கல்லூரி வாயிலில் இருந்து மண்டப அரங்குவரை 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் இந்து மகளிர் வரவேற்ற, பார்வையாளர்கள் எழுந்து மதிப்பளித்த நிலையிலா இப்புளகாங்கிதம்? இல்லை, அனைத்திலங்கைத் தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கான இசை, நடன, நாடக இறுதிப்போட்டிகளில், பத்து மாவட்டங்கள் பங்குகொண்டமை, 50க்கு மேற்பட்ட கல்விக்கூடங்கள் 1500க்கு மேற்பட்ட இளம் மாணவர்களை பங்குபற்ற வைத்தமை கண்டு நயந்த நிலையில்தான் இப்பூரிப்பு ஏற்பட்டது. நாதம், நாடகம் என்ற இரண்டின் இணைப்பாக காட்சிதரும் நடராஜப் பெருமானின் உட்பொருளை உணர்ந்தோர் இசை நடனம் நாடகம் என்பவற்றில் உன்மத்தம் கொள்வர். உந்துவர்; உயர்த்திடமுனைவர் என அவர் குறிப்பிட்டவேளை கரகோஷம் எழுந்தது. ஆரம்ப உரை முடிந்ததும் பல்வேறு வாத்தியங்களின் இணைப்பாய் அமைந்த பல்லியம் என்ற நடேஸ்வராக்கல்லூரியின் நிகழ்ச்சியும், தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியின் நடனமும் பொதுநிகழ்ச்சிகளாய் நிகழ்ந்தன. தொடர்ந்து போட்டிகள் நடந்தன,

### மனத்தை விட்டகலா மட்டக்களப்பு நாடகம்

இசை நடன நிகழ்ச்சிகள் தரமுயர்ந்து நின்ற அளவுக்கு நாடகங்களைக் காணோமே என்ற கவலையைத் துடைத்து நின்றது மட்டக்களப்புசெயின் சிசிலியஸ் மகளிர் மகாவித்தியாலயம் போட்டிக்காக அனுப்பிவைத்த வரலாற்று நாடகம். தேவதத்தன் உட்பட நான்கு இளம் இராசகுமாரர்கள் காட்டிலே வேட்டையாடுகிறார்கள். அவர்களின் எடுப்பான தோற்றம், பார்வை, நடை, அழகாக உச்சரிக்கப்பட்ட உரையாடல்கள் மிகக்கவர்ச்சியாய் அமைந்தன. வானத்தைப் பார்த்து நின்ற நிலையில் தேவதத்தன் பறந்துசெல்லும்அன்னம்பற்றி வர்ணிக்க உரைச் சிறப்பு காணுமலேயே அன்னத்தை பார்க்கும் நிலைக்கு உந்தியது, அம்பு எய்ததும் வந்து விழுந்த வெள்ளைநிறப் பெரிய அன்னப்பட்சி, வழிந்தோடும் இரத்தம், அதைக் கண்டெடுத்த சித்தார்த்தன் காட்டும் பரிவு, பார்வையாளரிடம் ஒரு அன்புக் கசிவை ஏற்படுத்தியது. துடிக்கும் அன்னத்துக்கு வாழ்வளிக்கப் பரிதவிக்கும் சித்தார்த்தன் ஒருபுறம், சட்டப்படி வேட்டையாடியதுசரி அப்பட்சியுந் தனதே என வாதாடும் தேவதத்தன் மறுபுறம். ஒரு புறம் அன்பு. மறுபுறம் சட்டம். இந்த இடத்தில் எழுத்தாளரின் திறமையை மெச்சாமல் இருக்கமுடியாது. தர்க்கரீதியாக, மனதை ஊடுருவவல்லதாக சுவையாக உரையாடலை அமைத்திருந்தார். நடித்த இரு மகளிரும் ஆண் தொனியில் அழுத்தமாக உச்சரித்து பாவனைமூலம் பார்வையாளரைக் கவர்ந்தனர். அவ்வழி வந்த அறக்காவலரிடம் முறையிட்டமை, தங்கள் தங்கள் கட்சிகளைக் கூறியமை, சட்டங்கள்இருக்கலாம் ஆனால் அவற்றை விஞ்சி அன்பு சக்தி வாய்ந்தது அதனைக் கட்டுப்படுத்தும் சட்டங்களால் நன்மையில்லை என்ற கருத்துகள் இழையோட அறக்காவலர் தீர்த்தமை, அதன்படி சித்தார்த்தன் அன்னத்தைப் பெற்றமை, தேவதத்தன் மனநெகிழ்வு உற்றமை. அன்பு உயிர்க்கொலை செய்யாமை என்ற சிறந்த பண்புகளுக்கு உரமூட்டுவதாய் அமைந்தன. தயாரிப்பாளர், நடிகர்தெரிவு, ஒப்பனை, குரல்பயிற்சி, உபயோகித்த பொருட்கள், அசைவுகள், உச்சரித்த விதங்கள், கூட்டுமுயற்சி என்றவகையில் நடிப்பித்தல்போன்ற ஒவ்வொரு நுண்ணிய அம்சங்களிலும் கூடிய கவனத்தைச்செலுத்தியுள்ளார், 25 நிமிட நாடகத்தில் ஈடுபட்ட அத்தனை பேரும் எத்தனையோ நூற்றுக்கணக்கான மணித்தியாலங்களைச் செலவிட்டிருக்கிறார்கள் போல் தெரிகிறது. ஆயத்தமில்லா நாடகங்கள் அரைகுறை நாடகங்கள், சினிமாப் பாணி நாடகங்கள், ஆபாச நாடகங்கள் என்றெல்லாம் பல கிருத்தியங்கள் மாணவர் நாடக உலகில்கூட நிகழும் இக்காலத்தில். இந்த நாடகம் நல்ல நிறைவைத் தருகிறது-குறை ஒன்று உண்டு. வேட்டையாடிய களத்தை இயற்கைப் பொருள்களால் காட்டியமை கலையின்பாற்பட்டதன்று. பாய்ச்சவேண்டிய கருத்தை ஆளப்பதிக்கும் முறையில் தயாரிக்கப்பட்ட விதம்தான் இதன் வெற்றிக்குக் காரணம்

### நாட்டிய நாடகத்தில் அதுவா? இதுவா?

நாட்டிய நாடகப் போட்டியில் இடம்பெற்ற இரு நிகழ்ச்சிகளும் இருவேறு பாணியில் நர்த்தன நுணுக்கங்களுடன் அமைந்திருந்தன. மானிப்பாய் மகளிர் கல்லூரி அளித்த நாட்டிய நாடகத்தில் அமைதிப்பாங்கும் • அழகும் ஒழுகியது பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரி முன்வைத்தநாட்டிய நாடகம் வீரம், தேவர் அசுரர் போட்டி என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்த நிலையில் விறுவிறுப்பும் கதகளி தாளக்கட்டுக் கலவைகளும் இணைந்திருந்தன. இரு நாடகங்களும் மாணவர் மத்தியில் நடனக்கலை வளர்ந்துள்ள தரத்தை சுட்டின. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

### பாதல் சர்காரின் பயிற்சி வகுப்பு

சென்னை 'வீதி' கலாச்சார இயக்க ஏற்பாட்டில் அடையார் அருகிலுள்ள கிராமத்தில் 'தெருநாடகம் சம்பந்தமான பயிற்சி வகுப்பு ஒன்று செப்டம்பர் 1ம் திகதி முதல் 10ம் திகதி வரை நடைபெற்றது. இந்தியாவின் புகழ்பெற்ற தெருநாடக தயாரிப்பாளர் பாதல் சர்கார் இவ்வகுப்பை நடாத்தினர். இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் பலர் பங்குகொண்டனர். இலங்கை நாடகக் கலைஞர் அந்தனி ஜீவாவும் இதில் கலந்து கொண்டார்.

---

இந்திய விடுதலை வீரர் வரிசை :

# சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

**வி. ரவிச்சந்திரன்**

பாரத நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவர்களுள் இராஜாஜி என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியும் ஒருவர். உலகில் நெருக்கடியான சூழ்நிலை உருவாகும் போதெல்லாம் இராஜாஜி என்ன சொல்லுகிறார் என்று கூர்ந்து கவனித்து வந்தனர். உலக அரங்கில் அவரது கருத்துக்கு அவ்வளவு மதிப்பு இருந்தது. இராஜாஜியின் சுதந்திரப் போராட்ட வரலாறு; சுதந்திர பாரதத்தின் வரலாறு எனலாம்.

பழமையும் பெருமையும் வாய்ந்த தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் என்ற சிறு நகரத்திற்கருகில் தொரப்பள்ளி என்னும் கிராமத்தில் சக்கரவர்த்தி வேங்கடார்யா ஐயங்காருக்கும் சிங்காரம்மாளுக்கும் 1878-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் திகதி அருந்தவ மைந்தனாய் இராஜாஜி தோன்றினார். இராஜாஜி இளமையிலேயே நற்பண்புகள் மிக்கவராய்க் கல்வி கற்பதில் ஆர்வமுடையவராய் விளங்கினார். உரிய வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அவரது அறிவுக் கூர்மையும் இனிய பண்புகளும் ஆசிரியர்கள் அனைவரையும் கவர்ந்தன. பின்னர் பெங்களூர் மத்திய கல்லூரியில் சேர்ந்து பயின்று 18-ம் வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். பின்பு சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பட்டம் பெற்றார்.

### முதல் வழக்கு

இராஜாஜியின் பெற்றோர் அவருக்கு அலர்மேலுமங்கம்மாள் என்னும் நங்கையைத் திருமணம் செய்வித்து மகிழ்ந்தனர். திருமணத்தின் பிறகு சலத்தில் வழக்கறிஞர்தொழிலில் ஈடுபட்ட இராஜாஜி முதல் வழக்கிலேயே வெற்றி கண்டு பெரும் புகழ் அடைந்தார். வழக்கறிஞர் தொழிலில் நிறைய சம்பாதித்தார்.

சமுதாயத்தில் நிலவி வந்த சாதி சமய வேறுபாடுகளைக் கண்டு நெஞ்சம் புழுங்கினார். தீண்டாமையை ஒழிப்பதே தனது முதல் கடமை என்று உறுதிபூண்டார். 1906-ம் ஆண்டு உயர் குலத்தவர்களின் எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது சேலம் கல்லூரியில் ஹரிஜன மாணவர்கள் சிலரைச் சேர்த்தார். உயர் குலம் - தாழ்ந்த குலம் என்ற வேறுபாடு கருதாமல் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் சமபந்தி உணவு முறையை சமுதாயத்தில் பரப்பினார்.

### தீண்டாமை ஒழிப்பு

ஹரிஜன குலத்தில் பிறந்து சேற்றில் முளைத்த செந்தாமரையாய்த் திகழ்ந்த சுவாமி சகஜானந்தர் சேலத்திற்கு வந்தபோது அவரை அன்புடன் வரவேற்று சமபந்தி விருந்தளித்தார். இதனால் இராஜாஜீயும் அவரது நண்பர்களும் சாதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் மனம் தளரவில்லை.

திருப்பதி கோயிலில் நுழைந்ததற்காகக் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட ஹரிஜன மக்களுக்காக இராஜாஜி தாமே வழக்கறிஞராக நின்று வாதிட்டு அவர்களை விடுதலை பெறச் செய்தது தீண்டாமை ஒழிப்பில் அவருக்கு இருந்த ஆர்வத்தைக் காட்டுகிறது.

அக்காலத்தில் இந்தியாவில் ஹரிஜனங்கள் ஆலயத்திற்குள் சென்று வழிபடுவதற்குத் தடை இருந்தது. இராஜாஜி சென்னை மாகாணத்தின் முதல்வரானவுடன் அந்த தடையை தகர்த்து எறிந்து ஆலயங்களுக்குள் ஹரிஜனங்கள் சென்று வழிபடலாமென்று சட்டம் இயற்றினார்.

### கலப்பு மணம்

அக்காலத்தில் நினைத்தே பார்க்க முடியாத கலப்புத் திருமணத்தை இராஜாஜி ஆதரித்தார். சொன்னதைச் செயலிலும் காட்டினார். அவரது இளைய மகள் லட்சுமியை மகாத்மா காந்திஜியின் மகன் தேவதாஸுக்கு மணமுடித்து வைத்தார். இராஜாஜி அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். காந்திஜி வைசிய குலத்தில் தோன்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1919-ம் ஆண்டு காந்திஜி இந்திய அரசியலில் புகுந்தார். ஆங்கில அரசு கொடுமை நிறைந்த ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்த போது அதை காந்தியடிகளும் ஏனைய தேசியத்தலைவர்களும் தடுக்க சத்தியாக்கிரகம் செய்ய முனைந்தனர். இச்செயல் இராஜாஜியின் உள்ளத்தில் விடுதலை உணர்ச்சியைத் தூண்டியது. உடனே அவர் சேலம் நகரசபைத்தலைவர் பதவியை உதறித்தள்ளிவிட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டார். சேலத்தை விட்டுச் சென்னையில் குடியேறினார்.

### சிறை சென்றார்

காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம் வெற்றி பெற இராஜாஜி மெய் வருத்தம் பாராது கண் துஞ்சாது உழைத்தார். வடநாட்டில் தண்டி என்ற இடத்தில் காந்திஜி உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கியபோது அதற்குப் பக்கபலமாக இராஜாஜீ தமிழ் நாட்டு வேதாரண்யத்தில் உப்பு சத்தியாக்கிரகம் நடத்தினார், இதனால் அவருக்கு ஒன்பது மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தொடர்ந்தும் விடுதலைப் போரில் ஈடுபட்டார். பலமுறை சிறை சென்றார்.

1937-ம் ஆண்டு இராஜாஜீ சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக பதவி ஏற்றார். (அப்போது முதலமைச்சர் என்ற பெயர் கிடையாது. தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம் மூன்றும் ஒரே மாநிலமாக இருந்தன.) அவரது நிர்வாகத் திறமையைக் கண்டு ஆங்கிலேயரே வியந்து பாராட்டினர். அவர் பதவிக்கு வந்தவுடன் குடிப்பழக்கத்தை நீக்குவதற்கு மதுவிலக்குச் சட்டத்தையும், ஏழை உழவர்களைக் கடன் தொல்லையிலிருந்து நீக்க கடன் நிவாரணச் சட்டத்தையும் கொண்டு வந்தார்.

### முதல் இந்திய கவர்னர் ஜெனரல்

1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்தது. அப்போது மேற்கு வங்காளத்தில் கலகமும், குழப்பமும் தோன்றின. அந்த நேரத்தில் அதை அடக்க இராஜாஜி மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். அவர் துணிவுடன் சென்று கவர்னர் பொறுப்பை ஏற்று கலகங்களை அடக்கினார். இது அவரது சாதனைகளுள் குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கில அரசு எல்லா அதிகாரங்களையும் இந்தியரிடம் ஒப்படைத்தது. அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த மவுண்ட் பேட்டன் பிரபு பதவி விலகினார். 1948-ம் ஆண்டு ஜூன் 21-ம் திகதி இந்திய தலைவர்கள் இராஜாஜியை கவர்னர் ஜெனரலாக நியமித்தனர். சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் என்ற பெருமையும் அவருக்கு வந்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

---

## பாரதி வழி நின்று

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்திட அம்பிகையின் அருளைப் பெறுவதற்கு அவதார புருஷர்களும் சக்தி பூஜை செய்திருக்கிறார்கள். இராமபிரான் இலங்கைக்குப் போகு முன்பு துர்க்கை பூஜை செய்ததாகவும், கண்ணபிரான் காத்தாயினி பூஜை செய்ததாகவும் சொல்லப்படுகிறது. சங்கராச்சாரியார் சாரதாபூஜைபண்ணி அம்பிகையின் அருளைப் பெற்றார். இக்காலத்தில் தோன்றிய அருளாளர் இராமகிருஷ்ண பரமஹம்சர், காளியின் அருளைப் பெற்றார். தெய்வ பக்தியும், தேச பக்தியும் நிறைந்த மகாகவி சுப்ரமண்யபாரதியார்; பராசக்தியை அல்லும் பகலும் அனவரதமும் வழிபட்டு, வாயாரப் பாடிக் கிடைத்தற்கரிய பேரருளைப் பெற்றார்.

இயற்கையென் றுனையுரைப்
பார்.....சிலர்
இணங்கும் ஐம்பூதங்கள்
என்றிசைப்பார்
செயற்கையின் சக்தியென்
பார்—உயிர்த்
தீயென்பார், அறிவென்
பார், ஈசனென்பார்
வியப்புறு தாய்
நினக்கே—இங்கு
வேள்விசெய் திடுமெங்கள்
'ஓம்' என்னும்
நயப்படு மதுவுண்டே—சிவ
நாட்டியங் காட்டிநல்
லருள் புரிவாய்.

உள்ளம் குளிராதோ
—பொய்யாணவ
ஊனம் ஒழியாதோ
கள்ளம் உருகாதோ
—அம்மாபக்திக்
கண்ணீர் பெருகாதோ
வெள்ளக் கருணையிலே
—இந்நாய்சிறு
வேட்கை தவிராதோ
விள்ளற் கரியவளே
அனைத்திலும்
மேவியிருப் பவளே.

எனப் பாடி அகங்குழைந்து அவளடி தொழுது மேலும் விண்ணப்பஞ் செய்கிறார்.

வெள்ளை மலர்மிசை வேதக்
கருப்பொருளாக விளங்
கிடுவாய்
தெள்ளு கலைத்தமிழ்வாணி
நினக்கொரு விண்ணப்
பஞ் செய்திடுவேன்
எள்ளத்தனைப் பொழுதும்
பயனின்றி இராதென்
றன் நாவினிலே
வெள்ளமெனப் பொழிவாய்
சக்திவேல், சக்திவேல்,
சக்திவேல்.

பாரதியின் வழிநின்று பராசக்தியின் அருளைப்பெற முயல்வோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிஞர் போற்றும் கலைமகள்

செல்வன்
இராஜரட்ணம் இரட்ணராஜ்
(கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்)

உலகின் நிகழ்ச்சிக்கான பெருந்தொழில்கள் மூன்று. அவை படைத்தல், காத்தல், அழித்தல் என்பன. இவை மூன்றிற்கும் நாயகர்கள்மூவர். அவர்கள் நான்முகன், திருமால், சிவபிரான். பிரமனின் படைப்புத் தொழிலும், திருமாலின் காத்தல் தொழிலும் இடையூறின்றி நிகழ்ந்து வருமேயானல் இவ்வுலகில் அவை வாழ்வதற்கான இடமின்றிப் பெரு நெருக்கடியும் ஏற்பட்டுவிடும். எனவே உரிய காலங்களில் அழிக்கும் கடமையைப் பூண்டு விளக்கினா சிவபெருமான்.

படைக்கும் தொழில் செய்யும் நான்முகன் சுவையாகக் கொள்ளுகின்ற என் தாயே! சகல கலைகளுக்கும் நாயகியான சரஸ்வதியே என்று குமரகுருபர அடிகள் சகலகலாவல்லி மாலையிலே கூறுகின்றார். மேலும் அவர் வெண்தாமரை ஆகிய இருக்கையிலே கூடியிருக்கின்ற பசுமையான அழகிய கொடி போன்றவளே சகலமான கலையின் உருவாகவும் விளங்கும் பசும்பொற்கொடியே என்றும் கூறுகின்றார்.

கலைவாணி அருள் உள்ளம் உடையவள். கலைக்குத் தெய்வமான அவள் கவிஞர்கள் பொழிகின்ற கவிமழையினலே களிக்கின்ற தன்மையும் உடையவள். எனவே அடிகளார் உளம்கொண்டு தெள்ளித் தெளிக்கும் பனுவற் புலவர்.

கவிமழை சிந்தக்கண்டு களிக்கும் கலாபமயிலே என்று கவிபாடும் புலவோரை மேகமாகவும் அவர் பாடும் கவிதைக்களை மழைத் துளிகளாகவும் அதனைக்கண்டு களிக்கும் கலைவாணியை கலாப மயிலாகவும் கொண்டு உரைக்கின்றார் அடிகளார்.

மிகவும் நெடிதான தண்டினைக் கொண்ட தாமரை மலரிடத்தே வாழ்கின்றதான அன்னப் பறவையினைக் கொடியாக உயர்த்தியவன் பிரம்மதேவன். அவனுடைய செவ்விய நாவிலும் உள்ளத்திலும் வெண்தாமரை மலரிலே வீற்றிருப்பது போன்று வீற்றிருப்பவளே செம்பஞ்சுக் குழம்பு பூசப் பெற்றதும் அன்பர்க்கு இதம் தருவதும் சிவந்ததும் அழகியதுமான நின்பாதத் தாமரை என் நெஞ்சமாகிய குளத்திலே மலராததன் காரணம் என்னவோ? என அடிகளார் தனது சகலகலாவல்லி மாலையிலே கூறியுள்ளார்: மேலும் அவர் வேதங்களும் ஆகாயமும் நிலமும் புனலும் நெருப்பும் வெம்மையான காற்றும் அன்பர்களின் கண்ணும் கருத்தும் ஆகிய எவ்விடத்தும் நிறைந்திருப்பவளே என்றும் பண்ணும் பரதமும் கல்வியும் இனிய சொற்களால் அமைந்த கவிதைகளும் யான் எண்ணும் போது எளிதாக வந்து என்னை அடையும் படியாக எனக்கருள் செய்வாயாக என்றும் தனது மாலையில் கூறியுள்ளார்.

குமரகுருபர அடிகளார் மேலும் தமது சகலகலாவல்லி மாலையில் அன்பர்கள் தம் உள்ளங்களிலே கவிபாடுதலை மேற்கொண்டு செய்கின்ற கலைத் தன்மையுடையதாகிய தமிழ் எனும் இனிய பாலாகிய அமுதத்தினைத் தெளிந்து எடுத்து ஏற்றுக்கொள்ளும் வகையினைக் காட்டி விளங்குகின்ற வெண்மையான அன்னப் பேடையினைப் போன்றவளே! பாட்டும், பாட்டின் பொருளும், அப்பொருளினலே வந்தடையும் பயனும் என்ற மூன்றும் தன்னிடத்தே வந்தடையும்படியாக நின் கடைக்கண்பார்வையினைத் தந்தருள்வாயாக என்று தனது "பாட்டும் பொருளும்" என்று தொடரும் பாடலில் கூறியுள்ளார்.

மேலும் அடிகளார் அரிதானது என்றமைந்ததும், ஒரு காலத்தும் சிதையாமல் நிலைத்த பேற்றினைத் தருகின்றதுமான கல்வியாகிய பெருஞ்செல்வத்தின் பேருக விளங்கும் தாயே என்றும், தனது இறுதிப் பாடலிலே இந்த மண்ணகத்தே இருக்கின்றவளும், வெண்கொற்றக் குடை நிழலின் கீழாக அமர்ந்து, சிறப்புற்று வருமான அரசர்களும் என் பண்நிறைந்த பாடலைக் கண்ட போதிலே என்னைப் பணிந்து, தாழ்ந்து என் ஏவலைக் கேட்குமாறு செய்தருள்வாயாக என்று கலைவாணியை வேண்டித் தொழுகின்றார்.

இங்ஙனம் கலைவாணியின் அருள் பெற்றுத் தன் கடமையை நிறைவேற்றிக்கொண்டவர் குமரகுருபர அடிகள், இந்தப் பத்துப் பாடல்களையும் உளங்கலந்து ஓதியவராகக் கலைமகளை நினைந்து துதிப்பவர்- அவளருளாலே நலம் பெறுவர் என்பது ஆன்றோர் வாக்கு.

# நவராத்திரி

உலக மாதாவாகிய ஈஸ்வரியை வழிபட்டுக் கொண்டாடும் விழாக்களில் முதன்மை வகிப்பது நவராத்திரி.

இறைவியாகிய சக்தியைக் குழந்தையாகவும், கன்னியாகவும், குமரியாகவும், தாயாகவும், தேவியாகவும் வழிபடும் தினங்கள், நவராத்திரி என்னும் ஒன்பது நாட்களாகும். இவ்விழா விஜயதசமியுடன் பூர்த்தியாகின்றது.

குழந்தை விளையாட்டைப் போலத் தேவியும் தமது திருவிளையாடலால் இவ்வுலகின் ஆக்கத்திற்கு உபகரிக்கின்றாள். இவ்வுலகும், எம் வாழ்வும், எப்பேறும் எல்லாம் அவள் தந்த ஆக்கமேயாம்.

நவராத்திரி நாட்களில், தேவியைக் கும்பத்தில் எழுந்தருளச்செய்து, பூசைசெய்து வழிபடுவார்கள். தேவி வழிபாட்டில் குங்குமம், மஞ்சள் மகிமை வாய்ந்தவை.

இவ்வொன்பது இரவும் வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் வேண்டி முறைறோ துர்க்காதேவியையும், இலக்குமியையும், சரஸ்வதியையும் வழிபட்டுக் கொண்டாடுகின்றனர். பத்தாம் நாள், நாம் வணங்கியதனல் பெற்ற அருளினல் புதிய காரியங்களை, அவரவர் தொழில்முறைக்கு ஏற்றதாக ஆரம்பிக்கின்றனர். கடந்த காலத்தில் தம்மைப் பிடித்த இருள் அகன்று, தாம் புது மனிதர் என்னும் பூரிப்புடன் செயல்பட ஆரம்பிக்கின்றனர்.

க. துரைசிங்கம்
நடேஸ்வராக் கல்லூரி,
காங்கேசன் துறை.

ஒன்பது இரவுகளில் சக்திக்கு முதன்மை கொடுத்து வணங்குவதினல், இவ்விழா சக்திவிரதமாக அமைகின்றது.

சக்தியானவள், உமை என்னும் திருநாமத்துடன் உலக கர்த்தாவாகிய சிவபெருமானது இடது பாகத்தில் அமைந்து, திருவருட் சக்தியாய், பஞ்ச கிருத்தியங்களைச் செய்யக் காரணியாய் விளங்குகின்றாள்.

துர்க்கை, காளி, சாமுண்டி முதலிய திருநாமங்களைப் பூண்டு, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனமும் செய்வாள். உலகின் அழகையும், பெண்பாலாரிடம் வசீகரத்தையும் உதவிப் பிரபஞ்சம் நடைபெறச் செய்யும் பெருமாட்டியாவாள்.

ஆன்ம கோடிகள் வலுவிழந்தபோது, நவசக்தியை ஊட்டி அருள்பாலிப்பாள். எனவே பல நாமங்களுடன் மிளிரும் அபிராமித்தாயை, மகேஸ்வரியை, மனோன்மணியை, இராசேஸ்வரியைத் துதித்து அருள்பெறுவோமாக.

தேவி வழிபாட்டில், கலைமகள் வழிபாடும் ஒன்று. அவளே கலைத்தெய்வம். கலைகள் அறுபத்துநான்கினையும் எமக்குத் தருபவள் அவள். ஆகவேதான் கலைகளுக்குரிய ஆயுதங்கள் அனைத்தையும், அவளுக்கு முன்னே வைத்து எமக்குக் கலைஞானத்தைத் தந்தருள்வாய் என்று வணங்குகின்றோம்.

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## எண்ணத்தை மகிழ்வித்தவர்கள்

மாணவர்கள் எண்ணப் பிரதிபலிப்பாகிய இந்த மாணவர் எண்ணத்தில் இன்று இங்கு நாம் உங்களுக்கு அறிமுகப் படுத்துபவர் செல்வன் ஆறு. திருமுருகன்.

திருமுருகன் மாணவர் எண்ணத்தில் பல கதை, கட்டுரைகள் எழுதியுள்ளார். இவற்றுள் இங்கு நாம் குறிப்பிட்டுக் கூற வேண்டியது அவருடைய கதைகள்தான். அவர் நல்ல இலக்கிய மணம் கமழ எழுதியுள்ளார்.

செல்வன் திருமுருகன் யாழ். இந்துக் கல்லூரியில் க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி பயிலுகிறார்.

திருமுருகனின் இலக்கியச் சேவைக்கு நல்ல எடுத்துக் காட்டு 'யாழ்மதி' சஞ்சிகை தான். 'யாழ்மதி' என்னும் இலக்கிய இதழின் ஆசிரியரும், அமைப்பாளரும் இவர்தான்! இதில் பல மாணவர்களின் படைப்புக்கள் தாங்கி வெளிவந்துள்ளது.

திருமுருகன் மேலும் நல்ல எழுத்தாளராகப் பிரகாசிக்க வேண்டுமென்று 'மாணவர் எண்ணம்' சார்பில் வாழ்த்துவோம்.

வி. சந்திரகுமார்

## கவிதை அரங்கு

### பூவில் இருக்கும் தாயவள்

பூவில் நிதம் வாழ்பவள்
பொங்கு மெழிற் கலைமகள்,
காவில் ஊறும் தேன்நிகர்
கவிதை யமுது தந்தவள்
நாவில் வந்து விந்தையினை
நன்று பதித்து விட்டவள்
கோவில் வைத்துக் கும்பிடும்
கல்வித் தெய்வத் தாயவள்.

உற்று நோயைப் போக்கவும்
உயர்ந்த மாடி கட்டவும்
விற்று வாங்கி வாழவும்
வித்தை சொல்லித் தந்தவள்
பற்று கொண்ட வாழ்க்கையின்
பல்கும் கலை யானவள்
கற்று மிக்க புகழினை
காட்டும் கருணைத் தாயவள்.

வானவர் மஞ்சம் வாய்த்திடும்
வேதத்தின் முத லானவள்
மாணவர் நெஞ்சத் தரங்கில்
மகிழ்வுறக் குடி கொள்பவள்
தேனவர் வாழ்வொன்ற சிறக்க
தன்னருள் தன்னைத் தந்தவள்
மீனுவர் நீரிற் பாய்வதுபோல்
மின்னிடும் விழித் தாயவள்.

நா. யோகராசா
யாழ். பல்கலைக்கழகம்.

## உங்கள் திருமுகம்

வாரமலரில் வெளியாகும் மாணவர் பகுதியில் இடம் பெறும் அம்சங்கள் யாவும் பயன் தரக்கூடியவையாக அமைந்துள்ளன. மாணவர்களின் ஆர்வத்திற்கும், திறமைக்கும் மதிப்பளித்து, மாணவருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவருகிறது, 'ஈழநாடு'.

ஏ, இளங்கோ
யாழ். பல்கலைக்கழகம்.

## கொஞ்சம் சிரியுங்கள்

மகன்: அப்பு நீங்கள் ஊரிலை செய்யிற வேலையாலை என்ரை மானம் மரியாதையெல்லாம் கப்பலிலை போகுது.

தகப்பன்: அதுக்கென்ன போனல் போகட்டும் நீ போவாயெண்டு நினைச்சன் உன்ரை பலனுக்கு இப்போதைக்குப் போகமாட்டாயாம் அதுகளாவது நேரவேலைக்குப் போய் உழைச்சனுப் பட்டுமன் விடன்.

பழனி லோகதாஸ்
யாழ்/கனகரத்தினம் மகாவித்தியாலயம்.

## நவராத்திரி சிரிப்பு

"நான் நவராத்திரி விரதம். எனவே மூன்று கப் டீ, மூன்று வாழைப் பழம் மூன்று கப்காப்பி குடித்தேன்!........"

"?...?...?

"என்னது மழையிலை இந்தநேரத்தில உம்முடைய இரண்டு ஏக்கர் வயலை டிரக்டரால உழுகிறீரே.....?"

"நவராத்திரிக்கு நவதானியம் விதைக்க வேண்டாமா?....."

வி. இந்துமதி
வேம்படி
மகளிர் கல்லூரி.

"என்ன அங்க அக்காவும்தங்கையும் சண்டை?

"நவராத்திரிக்கு கொலு வைக்கிற விசயத்தில இரண்டு பேருக்குமிடையில 'கொளுவல்' ஏற்பட்டுவிட்டதாம்!....."

மா. யசோதினி
வேம்படி
மகளிர் கல்லூரி

"எங்கட ராமு முன்பு ஜெசுதாசின்ட அவளே என் காதலி......பாட்டை அடிக்கடி படிப்பான் ஆனல் இப்ப சில நாளா....."

"என்னசில நாளா....."
"அவலே என் காதலி எண்டு படிக்கிறன்"

வி. சந்திரகுமார்
யயழ். மத்திய கல்லூரி.

# அணுவமைப்பு

தொடர்ச்சி III

1\. I Li
II. Be, Mg, Ca, Sr, Ba.
III. B
IV. C
V. N
VI. O
VII. F
VIII. Ne

ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாம் ஆவர்த்தனத்தையும் இரண்டாம் கூட்டத்தையும் மேலே தரப்பட்டிருக்கும் அட்டவணை எடுத்துக் காட்டுகிறது.

(i) மேலே தரப்பட்ட மூலகங்களுள் எந்த ஒரு மூலகம் அதன் வலுவின் வெளியோட்டில் 6 இலத்திரன்களை உடையது?
(ii) எந்த மூலகம் மிக அதிகமான அணு நிறையைக் கொண்டிருக்கும்.
(iii) எந்த மூலகம் மற்றைய மூலகங்களுடன்சேர்ந்து சேவைகளை ஆக்குவதற்கான வாய்ப்பினை மிகக் குறைவாகக் கொண்டுள்ளது?
(iv) வளி அமுக்கத்தில் 0°C அளவுக்குக் குறைவாக கொதிநிலையுடைய நான்கு மூலகங்கள் தருக.
(v) B யினது அயனேற்றம் யாது?
(vi) பெரும்பாலும் பங்கீட்டு வலுப்பிணைப்பில் ஈடுபடும் மூலகம் எது?
(vii) வலுவளவு 3 உடைய மூலகங்கள் எவை?

விடைகள்
(i) O, (ii) Ba,
(iii) Ne, (iv) N, O, F, Ne
(v) B+++, (vi) C,
(vii) B, N

2\.
H He
Li Be B C N O F Ne
Na Mg Al Si P S Cl Ar

ஆவர்த்தன அட்டவணையின் ஒரு பகுதி மேலே தரப்பட்டுள்ளது.

(i) ஒரு ஓரணு வாயுவைப் பெயரிடுக.
(ii) இயற்கையில் அதிகமாக காணப்படும் மூலகம் எது?
(iii) ஆகக்குறைவான முதல் அயனாக்கசக்திஉடைய மூலகம் எது?
(vi) Mg யினது புறஒழுக்கில் எத்தனை இலத்திரன்கள் இருக்கும்.
(v) P யினது அணு எண் யாது?
(vi) Na, O சேரும் ஆயின் உண்டாகும் சூத்திரம் யாது?
(vii) ஈற்றோற்றில் எட்டு இலத்திரன்களை கொண்டிராத சடத்துவ வாயு எது?

விடைகள்
(i) எட்டாம் கூட்டத்தில் உள்ள ஒரு மூலகத்தை பெயரிடுக.
(ii) Si, (iii) Na,
(iv) 2, (v) 15,
(vi) $Na_2O$, (vii) He..

ஆசிரியர்:
ம. ஸ்ரீதரன்,
(கொக்குவில் இந்துக் கல்லூரி)

குறிப்பு:
அடுத்த அலகு சக்தியும் பிணைப்புக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - லதா - வாணிஸ்ரீ
ஊருக்கு உழைப்பவன்
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வசூலில் பெரும் சாதனை! 3-வது வெற்றி வாரம்!
ஆஹா! இது என்ன பெண்கள் கூட்டம்? பெண்குலத்தின் பெருமையை எடுத்துக் காட்டும் கோகிலா. தமிழ் வசனநடைக்கு பெருமை தேடித்தந்த கலைஞர் கருணாநிதி இவர்களைக் காண ராஜா வெண்திரையை நாடுங்கள். 20 நாட்களில் 1 லட்சம் பேர் பார்த்துவிட்டனர். இடத்துக்கு முந்துங்கள். இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

## சிறுகதை ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாசம் வரவும் போறான்.''

அப்புவின் நிதானமான பதில்.

ஓ..... நீ முந்தி நான் முந்தியெண்டு கொழுத்த சீதனத் தோடை அவனை உங்கடை ஆக்கள் தட்டிக் கொண்டு போடுவினம். நீங்கள் வெறுங் கையோடை என்ன செய்யப் போறியள்?'' அம்மாவின் புதிய திருப்பம் அப்புவை உணர்ச்சியுடன் கதைக்கும்படி தூண்டுகிறது.

''வள்ளி! உனக்கு முத்துவை நல்லாத் தெரியாது. அவன் தாயில்லாப்பிள்ளை பசிச்சுவந்த சோறு போட்டாய் நீ. அவனின்ரை பசிதான் உனக்குத் தெரியும். அவனின்ரை பண்பு, குணம் ஒண்டும் உனக்குத் தெரியாது. இண்டைக்கு அவன் காயிதம் போட்டிருக்கிறான், வாற நாலாந் திகதி வாறானாம். இஞ்சைதான் தங்கப்போறானாம். வள்ளி! குடுத்துக்குடுத்து ஓட்டாண்டியான வனடி இந்த முருகு! என்னை என்ரை வைரவர் கைவிட மாட்டார்.''— அப்புவின் விழிகள் கலங்குகின்றனவோ என்னும்படியாகக் குரல் கரகரக்கிறது.

'ஓ..... எங்கடை சமூகத்துக்குள்ளை கொஞ்சம் படிச்சவள் எண்ட பேர் எனக்கு இருக்கிறதாலையும் முறை மச்சாள் என்பதாலையும்தானே அண்டைக்கு முத்து அத்தான் அப்புவிட்டை வலிய வந்து கேட்டவர். இண்டைக்கும் அதே நினைப்போடைகாயிதம்போட்டிருக்கிறாரென்றால் ..... அவரின்ரை பண்புதான் அப்புவுக்கும் பிடிச்சிருக்கு. ஊதாரி, வாழத் தெரியாதவன் எண்டெல்லாம் ஊரிலை பேசப்பட்ட அதே முத்து, பணம் வந்தபோதும் அப்புவிட்டை நேரை வந்து சேரும் அளவிற்குக் குணம் மாறாமல் இருக்கிறாரே.....'—தாமரையின் எண்ணச்சிதறல்கள் கோடைமழையின் உக்கிரத்தில் கரைந்து போகின்றன. ம்..... காலங்கள் மட்டும் மாறாமல் தமது நியதிப்படி ஓடிக்கொண்டிருக்கும்போது இந்த மனிதர்கள் எத்தனை தூரம் மாறிவிட்டார்கள்.

''தாமரை! சித்ரா ஏன் உன்னை அப்பிடிப் பார்க்கிறா? துர்க்காவைக் காட்டன். உன்னோடை படிச்சவ எல்லே?'' -முத்துவின் பரிவான குரலும் இதமான கரமும் தாமரையை நிஜவுலகிற்குக் கொண்டு வருகின்றன.

''ஓ..... என்னத்தான் சித்ராவோ..... அவ..... என்னை இங்கை எதிர்பார்க்கேல்லை. பாவம்..... அவவுக்கு -ஏழில் செவ்வாயாம், அதுதான்இன்னும் கல்யாணம் நடக்கேல்லை. நல்ல பிள்ளை!'' -தாமரை மலர்ந்த முகத்துடன் சித்ராவை நோக்கி நடக்கிறாள். சித்ரா சிநேகபாவத்துடன் குழந்தை துர்க்காவின் மலர்க்கரங்களைப் பற்றிச் சிரிக்கிறாள், அனைவருக்கும் அப்பால் மூலஸ்தான ஒளிவிளக்கிலே துர்க்கையின் மாறாத புன்னகை பாரபட்சமன்றி அனைவரையும் ஆசீர்வதித்துக்கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி
விஜயா-நாகேஷ்
பாலாடை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
தாய்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
மர்மயோகி

## சக்கரவர்த்தி .....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாஜி சிறந்த அரசியல்வாதி மட்டுமல்ல. சிறந்த எழுத்தாளரும் கூட. எளிய இனிய தமிழ் நடையில் எழுதுவதில் அவர் ஆற்றல் மிக்கவர். அவர் எழுதிய கண்ணன் காட்டியவழி உபநிடதப் பல கணி— குடிகெடுக்கும் கள் — தமிழில் வருமா? என்னும் நூல்கள் —. மக்களால் போற்றப்படுகின்றன. மகா பாரதக்கதையை வியாசர் விருந்தாகவும், இராமாயணத்தை சக்கரவர்த்தித் திருமகன் என்ற நூலாகவும் ஆக்கித் தமிழ் மக்களுக்கு இலக்கிய விருந்தளித்தார். உலக மக்களும் திருக்குறளைக் கற்று அதன் பெருமையை உணர வேண்டுமென்பதற்காக திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் ஒரு விளக்கம் எழுதியுள்ளார். சிறுகதை எறுதுவதிலும் அவர் சிறந்து விளங்கினார். விமோசனம் என்னும் திங்களிதழையும் இராஜாஜி நடத்தினார்.

தமிழ் நாட்டில் திருச்செங்கோட்டிற்கு அருகிலிலுள்ள புதுப்பாளையத்தில் ஆசிரமம் அமைத்து அவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது.

உலக அமைதிக்காகவும் அவர் அரும்பாடுபட்டார். மனித குலத்திற்கு பெரும் தீங்கு விளைவிக்கும் அணு ஆயுதச்சோதனையை எதிர்த்துப் போராடத் தள்ளாத வயதில் அமெரிக்கா சென்றார். அமெரிக்க அதிபர் கென்னடியுடன் கலந்துரையாடி அணுச் சோதனையை நிறுத்துமாறு வற்புறுத்தினார். இறுதி மூச்சு உள்ள வரை அவர் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டி இந்திய அரசு மிக உயர்ந்த விருதான பாரத ரத்ன என்னும் விருதை அளித்துப் பெருமைப் படுத்தியது.

இப்படி அருந்தவத்தொண்டாற்றிய இராஜாஜி 1922-ம் ஆண்டு டிசம்பர் 25-ம் திகதி நாட்டு மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமரரானார். அவரது உடல் மறைந்தாலும் அவரது புகழ் மறையா வண்ணம் சென்னை மாநகரில் அவருக்கு ஒரு நினைவாலயம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

## ஆற்றலும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டுப் போட்டிகள், கைப்பொருட் காட்சிகள், சாரணர் இயக்கம், கூட்டுறவு இயக்கம் ஆகிய பல துறைகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களுடைய அறிவை விரிவுபடுத்தியவர் திரு. மு. க. சு. அவர்களே.

பாடசாலையின் 75-ம் ஆண்டுப் பூர்த்தியின் போது ஊர் மக்களெல்லோரும் பங்கு கொண்டு குதூகலிக்கும்படியான பெருவிழா ஒன்றினை நடாத்தி அனைவரது பாராட்டையும் பெற்றார். அக்காலத்தில் அவரால் வெளியிடப்பட்ட 'பொன்..பரமானந்தம்' என்ற மலர் குரும்பசிட்டிக் கிராமத்திற்கு ஒரு வரலாற்று ஏடாகவும் அமைந்துள்ளது எனலாம். தமது ஆற்றல் முழுவதையும் பாடசாலை வளர்ச்சிக்காக அர்ப்பணித்துப் பாடசாலைக்கும் அதன் மூலம் இக்கிராமத்திற்கும் பெரும் சிறப்பை ஏற்படுத்திய அதிபர் திரு. மு, க. சுப்பிரமணியம் அவர்கள் ஓய்வு பெற்று நீண்ட காலம் சிறப்புடன் வாழ்வார் என எதிர்பார்த்திருந்தோம். அதற்கு மாறாக மிகச் சில ஆண்டுகளுக்குள்ளேயே அவர் அமரராகி விட்டார். இந் நிகழ்ச்சியால் திரு. பொன். பரமானந்தர் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய எல்லோரும் தாங்கொணாத் துன்பம் அடைந்துள்ளனர். இறைவனுடைய திருவருள் அவருடைய ஆன்மாவுக்கு நித்திய சாந்தியை ஏற்படுத்துவதாக.

(அன்னாரது சிரார்த்ததினம் நாளை நடைபெறுகிறது.)

பொன். பரமானந்தர்
வித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

எழில் மிகு யாழ். ஸ்ரீதர் அரங்கில்
வெற்றி முரசு கொட்டும் 3-வது வாரமாக
அலை மோதும் ஜனசமுத்திரத்தில் கொட்டும் மழையிலும்
கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை
எடுத்துக்கொர்ண்ட தமிழக முதல்வர் M G R. மற்றும்
லதா, நிர்மலா, V. K. ராமசாமி, P. S வீரப்பா
நம்பியார், தேங்காய், நாகேஷ், கண்ணன்
மற்றும் பலர் திறம்பட நடித்த ஸ்ரீதரின்
மீனவ நண்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணக்கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு
4 காட்சிகள்
கீதாலயா மூவிஸ்
அளிக்கும
மாத்தளை கார்த்திகேசுவின்
டீன்குமார்,
K.S. பாலச்சந்திரன்,
பரீனலை,
விஜயராஜா
நடித்த

'அவள் ஒரு ஜீவநதி'
சிறந்த தமிழ் திரைக் காவியம்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-15, 7-15, 9-30
THE GAUNTLET

லிடோ
(யாழ்நகர்)
Daily at: 10-30 m, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm
RIVER OF THE GREAT CAYMAN

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
100-வது வெற்றித் திருநாளை நோக்கி......
நீயா? "வெள்ளி விழா" வண்ணச்சித்திரம்
Next Attraction : "THE DIRTY DOZEN"
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள்,
நண்பர்கள்,
அனைவருக்கும்.

**ஹஜ் நல்வாழ்த்துக்கள்**

**சீக்கோ டிரேடர்ஸ்**
(உட்புறம்)
43, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.


# இந்தியா - அமெரிக்க ஆயுத ஒத்துழைப்பு!

புதுடில்லி அக். 18.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் புதிய ராணுவ ஒத்துழைப்பு ஒன்று ஏற்படலாமென்று நியூயோர்க்கில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன,

இது தொடர்பாக இரு நாடுகளும் ஆயுதங்களை வாங்கி விற்பது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடந்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்திய பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரான திரு. கே. பி. ஏ. மேனன் அமெரிக்காவில் பென்டகன் நிருவாகிகளுடன் ஆலோசனைகள் நடத்தியிருக்கிறார். சுமார் 33 கோடி டாலர் பெறுமதியான யுத்த தாங்கிகளை அழித்தொழிக்கும் ஏவுகணைகள் உட்பட பல்வேறு ஆயுதங்களை வாங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.


கல்வனைஸ்ட் தெளிவுள்ள
கூரைத்தகடுகள்
35 U S G & 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
சி ஐ சி பெயின்ற் வகைகள்

**கதிர் ஹாட்வெயர்ஸ்**
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130


## சமாதான நீதவான் (ஜே. பி. யு.எப்

(யாழ்ப்பாணம்)

நல்லூரரைச் சேர்ந்த சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமான திரு. கனகரத்தினம் கேசவன் யாழ்ப்பாண நீதிநிருவாக மாவட்டத்திற்கான, சமாதான நீதவானாகவும், உத்தியோகப்பற்றற்றநீதவானாகவும் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



யாழ்ப்பாணம், நல்லூர் பிரபல சட்டத்தரணியும், யாழ்ப்பாண அரசசட்டத்தரணியும் திடீர்மரண விசாரணை அதிகாரியும், பதில் நீதவானுமான திரு. சி. கனகரத்தினம் திருமதி சி. கனகரத்தினம் ஆகியோரின் புதல்வரான இவர்; நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், சுண்டிக்குளி பரியோவான் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

யாழ்ப்பாணத்தில் பல சமூக சமய சேவைகளில் ஆர்வமுடன் முன்னின்று உழைக்கும் இவர், நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூகநிலையத்தின் தலைவரும், யாழ்ப்பாணம் இளம் கலைஞர் மன்றத்தின் செயற்குழு உறுப்பினருமாவார். யாழ்ப்பாண மாவட்டத்தில் வயதில் குறைந்த சமாதான நீதிபதியும், உத்தியோகப்பற்றற்ற நீதிபதியும் என்ற பெயரைத் தட்டிக்கொண்ட இவரைக் கடந்த 10-ம்திகதி வெள்ளிக்கிழமை, இவரது நண்பர்களும், சட்டத்தரணிகளும்வர்த்தகப்பிரமுகர்களும், நீதிமன்ற வாசலில் மாலைகள் அணிவித்து பாராட்டிக் கௌரவித்தனர்.

## வகுப்புக்கள்

அகில இலங்கை இளங்கலைஞர் மன்ற மியூசிக் அக்கடமியின் சங்கீத, நடன, வயலின், வீணை, மிருதங்க வகுப்புக்கள் விஜயதசமியன்று 19-10-80 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் ஆரம்பமாகும். புதிய மாணவ, மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 7145

## தேவை

சவர்க்காரம் தயாரிப்பதில் திறமையுள்ள "சோப் மேக்கர்" (Soap Maker) தேவை. திங்கள், செவ்வாய் இரு தினங்களிலும் நேரில் வரவும். நந்தினி கெமிக்கல் இன்டஸ்றீஸ், உயரப்புலம், ஆனைக்கோட்டை. 7143

## காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் காங்கிரஸ் பணி மனையில் நேற்று திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நவம்பர் 15-ம் திகதி கட்சி உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றை நடத்துவதென்றும் காங்கிரஸ் உறுப்பினர் அட்டை உள்ளவர்களும் அட்டை இல்லாதவர்கள் உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் வரலாம் என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

செயலாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் அன்றைய கூட்டத்தில் கட்சியின் யாப்புப் பற்றியும் விவாதிக்கப்படும் என்று தெரிகின்றது. மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது.

இதன் பின்னர் பொதுச் சபை கூடி செயற்குழுவையும் உறுப்பினர்களையும் தெரிவு செய்யும் என்று தெரிகின்றது.

## மாவை முத்தமிழ் கலை மன்றம்

மாவை முத்தமிழ் கலை மன்றத்தில் கடந்த புதன்கிழமை கலைமகள்விழா நடன ஆசிரியை செல்வி ரேலங்கி செல்லையா தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கலைநிகழ்ச்சிகளும் திரு. சிவபாலசுந்தரத்தினல் நவராத்திரி விழாவின் மகிமை பற்றிய சொற்பொழிவும் இடம்பெற்றன. திரு. சிவராசாநன்றியுரை கூறினர்.

## ஈரான்-ஈராக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபடான் நகரைக் கைப்பற்றுவதில் ஈராக் படைகள் முன்னேறிக்கொண்டிருப்பதாக ஈராக் தெரிவித்துவரும் அதே சமயம் ஈராக் படைகள் அபடானை நெருங்க விடாமல் தடுத்து எதிர்த்துப் போராடுவதாக ஈரான் தெரிவிக்கிறது.

## மானம்பூ

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மானம்பூ விழா நடைபெறும். மாலை 4-30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று, ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் குதிரை ஆருடராகி, வண்ணை மேற்கு ஐயனார்கோவிலில் மானம்பூ கன்னிவாழை வெட்டும் விழா நடைபெறும்.

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் வாணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். வாணி விழாவின் பின் புதிய மாணவர்களுக்கு வீணை, வயலின், மிருதங்கம், வாய்ப்பாட்டு முதலிய பாடங்கள் ஆரம்பிக்கப்படும்.


## தேவை

அலுமினியத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள ஸ்பின்னர், பொலிசர் உடனடியாகத் தேவை.

தொடர்புகொள்க:

**செல்சன்ஸ்**
**மெற்றல் இன்டஸ்றீஸ்**
118, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
7136


## மரண அறிவித்தல்
### திருமதி செல்லம்மா இரத்தினம்

சித்தன்கேணியைச் சேர்ந்த வ. இரத்தினத்தின் அருமை மனைவி காலமானர். இவர் தவராஜா (அப்புக்குட்டி அன் கம்பனி, கொழும்பு) மகேஸ்வரி, கனகமணி, கந்தசாமி (உதவி ஆசிரியர், ஈழநாடு) ஆகியோரின் அன்புத்தாயாரும் தியாகராஜா (அசிரியர் மதுகெதர தோட்டம், மத்துகம), நவரத்தினம் (ஊரியான் ப. நோ. கூ. சங்கம், பரந்தன்) புனிதவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகரன், கருணாகரன், கவிதா, சுரேஷ், ஜெனந்தி, குறிஞ்சிக்குமரன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன,

7144

## மரண அறிவித்தல்
### பண்டிதர் சி. இராசையா

இவர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, யாழ். நாவலர் வித்தியாசாலை முன்னாள் அதிபரும், அரி / ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை இளைப்பாறிய ஆசிரியை தங்கலட்சுமியின் கணவரும், மகேசன் (Velona Silks), காலஞ்சென்ற பவானி, இராதாதேவி, ஸ்ரீதரன் (ஜேர்மனி), சண்முகநாதன் (இங்கிலாந்து , ஆகியோரின் தந்தையும், மகேஸ்வரி (நஷ்ரியா மகாவித்தியாலயம் சிலாபம்), இரத்தினசுந்தரம் (உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), பத்மநாதன் (கச்சேரி, களுத்துறை) ஆகியோரின் மாமனும், திருமதி விசாலாட்சி கனகரத்தினம், திருமதி செல்லம்மா கந்தையா ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 19-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-30 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

62, A. V. ரோட், அரியாலை,
யாழ்ப்பாணம்.

7141


# Hoechst

உலகில் இரசாயனப் பொருட்கள் தயாரிப்பதில் முன்னணியில் திகழ்கின்ற மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த "ஹேக்ஸ்ட்" ஸ்தாபனத்தின் இலங்கைக் கிளை 1980-ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் குடாநாட்டின் எல்லா பகுதிகளிலும் :

**"ஹேக்ஸ்ட் விவசாய இரசாயன பொருட்களை"**

சந்தைப்படுத்தி விநியோகம் செய்ய உள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விவசாய சேவை நிலையங்களுக்கும், கமத்தொழில் திணைக்களத்திற்கும், தனியார் வர்த்தக நிலையங்கட்கும், பாவனையாளர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

எங்கள் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் முறைக்குமுறை உங்களிடம் வருகை தருவார்கள். மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகட்கும் தொடர்பு கொள்ளவும்.

INTASEL



**ஹேக்ஷ்ட் (சிலோன்) கம்பனி லிமிட்டெட்,**
செயலகம், பண்டகசாலை
315, வக்சால் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 23812.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் ... வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QB 8948/78 The Eelanaadu P.B. No. 49 Telegrame Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org